# தமிழ்ப்பாவடிவங்களை விளங்கிக்கொள்ளல்

பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன்

# தமிழ்ப் பாவடிவங்களை விளங்கிக்கொள்ளல்

பேராசிரியர் கலாநிதி. ம. இரகுநாதன்
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# தமிழ்ப்பாவடிவங்களை விளங்கிக்கொள்ளல்

பேராசிரியர் கலாநிதி. ம.இரகுநாதன்
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

தலைப்பு : தமிழ்ப்பாவடிவங்களை
விளங்கிக்கொள்ளல்

ஆசிரியர் : பேராசிரியர். கலாநிதி. ம.இரகுநாதன்

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : முதல் பதிப்பு ஒக்டோபர் 2009

வெளியீடு : எயில் பதிப்பகம்

அச்சுப்பதிப்பு : கரிகணன் பிறிண்டேர்ஸ்,
424, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Title : Understanding Tamil Prosody

Compiled by : Prof.Dr.M.Ragunathan

© : Author

Edition : First Edition, October 2009

Published : Eyil Publication

Printed by : Harikanan Printers,
424,K.K.S. Road, Jaffna, Sri Lanka.

ISBN : 978-9555-52012-0-9

Price : 350/-

# அணிந்துரை

எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி எனும் ஐந்திலக்கண மரபு தமிழ்மொழிக்குரிய சிறப்பமிசங்களுள் முக்கியமானது எனக் கூறுவர். தமிழ்க்கல்வி தமிழியற்கல்வியாக இன்று பரிணமித்திருக்கின்றது. பெரும்பாலான மாணவர்கள் இன்று பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே நாட்டம் காட்டுவதில்லை. நவீன இலக்கியம் இன்று மாணவர் மத்தியிலே கோலோச்சுவதை அவதானிக்க முடிகின்றது. மரபு இலக்கிய இலக்கணங் களை அறிந்து, பயின்று நவீன இலக்கியத்தினுட் பிரவேசிப்பவர்கள் நின்று நிலைக்கக்கூடிய வகையிலே தமது தடங்களைப் பதித்துள்ளனர். பாரதியையும் புதுமைப் பித்தனையும் இந்தத் தடத்திலேயே நாம் நினைவு கூரலாம். தமிழ் இலக்கிய இலக்கண மரபிலே காலூன்றி நவீன இலக்கிய உலகினுட் 'பாய' முற்படுவது மிகுந்த பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கை.

கவிதைக்கு யாப்பும் தேவையில்லை என்ற கருத்து இன்று வலுப்பெற்றுள்ளது. கவிதையைப் புதுக்கவிதை மரபுக்கவிதை என்று பாகுபாடு செய்கின்றனர். கவிதை என்பது ஒன்றுதான். அதில் மரபு, புதுமை என்ற பாகுபாடு வேண்டியதில்லை. உள்ளத்தை, உணர்வுகளைத் தட்டி ஊடுருவிச் சென்று ஒன்றையோ பலதையோ எது எமக்கு ஒத்திசைவுடன் சொல்லுகிறதோ அதைக் கவிதையென்று சொல்லலாம் போலத் தெரிகின்றது.

தமிழ் இலக்கியப் பரப்பிலே காணப்படும் செய்யுள் மரபையும் கவிதை மரபாகக் கருதியது எமது தவறேயன்றிக் கவிதையின் தவறாகாது. உரையாசிரியர்கள் செய்யுள், பாட்டு, கவிதை முதலானவற்றுக்கிடையே காணப்படும் நுண்ணிதான வேறுபாடுகளை ஆங்காங்கே சுட்டிச் செல்லத்தவறவில்லை. உரையாசிரியர்கள் தொட்டுச் சென்ற கவிதையியலை மிகச் சில ஆய்வாளர்களே சுட்டிக்காட்டி யுள்ளனர்.

தற்கால மாணவர்கள் யாப்பினை நிராகரித்து உதறித்தள்ளுகின்றனர். ஒன்றை அறிந்து விளங்கிய பின்னர் அதனை நிராகரிப்பதற்கும் எழுந்தமானமாக அதனைத் தூக்கி எறிவதற்கும் இடையே வேறுபாடு உண்டு.

தமிழ் இலக்கிய இலக்கண மரபுகளைத் தேடித்திரட்டி அறிய மாணவர்களைத் தூண்டுவது நமது

கடமையாகும். இலகுவாக மாணவர்களைச் சென்றடையக் கூடிய வகையிலே இலக்கிய இலக்கண நூல்களை வெளியிடவேண்டும்.

எமது துறையிலே பணியாற்றும் பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன் நவீன இலக்கியத்துறையையே தனது சிறப்புத்துறையாக வரித்துக்கொண்டவர். எனினும் நீண்டகாலமாகத் தமிழ்ச்சிறப்பு மாணவர்களுக்கு யாப்பியலைக் கற்பித்து வருகின்றார். மாணவர்களின் தேவையைத் தமது பட்டறிவின் மூலம் அறிந்து கொண்ட அனுபவத்தின் வெளிப்பாடாகவே இந்நூலைத் தருகின்றார்.

தமிழ்ச்சிறப்பு மாணவர்களுக்கும், பாலபண்டித, பண்டித மாணவர்களுக்கும் பயன்படும் விதத்திலே எளிமையாகவும் சுருக்கமாகவும் இந்நூலை எழுதியுள்ளார்.

உதாரணச் செய்யுள்களைக் காட்டி மாணவர்கள் யாப்பினை இலகுவாக விளங்கவைக்கின்றமை பாராட்டிற் குரியது.

நூலாசிரியர் இத்துறையிலே இன்னும் பலநூல் களை எழுதவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா,**
*தலைவர், தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# முன்னுரை

தமிழ்மொழி நீண்டகால வரலாற்றுப் பாரம்பரிய முடையது; தென்னிந்தியாவின் ஆதிக்குடிகளாக அறியப்பட்டவர்கள் தமிழர்களே; தென்னிந்தியாவின் பழம்பெரும் நாகரிகங்களுக்குச் சொந்தக்காரர்களும் இவர்களே. இவ்வாறான பழம்பெருமை மிக்க தமிழர்களின் வரலாற்றை, பண்பாட்டை எடுத்துக்கூறுகின்ற பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. செய்யுள் வடிவிலுள்ள இவ்விலக்கியங் களை நுணுகிக் கற்பதன் மூலமே தமிழர்களின் பண்பாட்டு வரலாற்றை மாத்திரமன்றி; இலக்கிய வளம், மொழி வளர்ச்சி ஆகியவற்றையும் அறிந்துகொள்ளலாம். எனவே, இச்செய்யுள் இலக்கியங்களைக் கற்பதற்குச் செய்யுள் தொடர்பான இலக்கண அறிவைப் பெற்றிருப்பதும் அவசியமாகும்.

தொல்காப்பியம் – பொருளதிகாரம்: செய்யுளியலே காலத்தால் முற்பட்டதாக எமக்குக் கிடைக்கின்ற செய்யுள் இலக்கணம் கூறும் நூலாகும். இதனையடுத்து, கி.பி. பத்தாம் நூற்றாண்டளவிலேயே யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை ஆகிய யாப்பிலக்கண நூல்கள் வெளிவந்தன. இந்நூல்களின் இறுக்கமான மொழிநடையாலும், வேறு காரணங்களாலும் மாணவர்கள் இவற்றைக் கடினமான நூல்களாகவே கருதி வருகின்றனர். இதனால் யாப்பியல் கற்பதற்குப் பலரும் அஞ்சி முன்வராத நிலையே கல்வியுலகிற் காணப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் தொல்காப்பியம் செய்யுளியல், யாப்பருங் கலக்காரிகை ஆகியன முறையே மூன்றாம், இரண்டாம் வருட மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. இவ்விரு பாட அலகுகளினூடாகவும் செய்யுள் யாப்பினைப் புரிந்து கொள்ளவும், செய்யுள்களை அலகிட்டு அவற்றின் யாப்பமைதியினைக் கண்டுகொள்ளவும், மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது.

இப்பாட அலகினைக் கற்பிக்கும்போது மாணவர் களுக்கு செய்யுள் களின் அசை, சீர், தளை, அடி ஆகிய வற்றை இனங்கண்டு கொள்வதற்குத் தொல்காப்பியம், முதலிய நூல்கள் பெரிதும் பயன்படாமையினை உணர்ந்து கொண்டதால் இலகுவான முறையிற் செய்யுள்களை

விளங்கிக்கொள்ளவும், அலகிடவும் வழிகாட்டும் நோக்கில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இந்நூல் தமிழ் சிறப்புக்கலை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரக் கூடியதாகும். அத்துடன் யாப்பினைக் கற்க விரும்புகின்ற பாலபண்டித, பண்டித வகுப்பு மாணவர்களுக்கும் உதவக் கூடிய வகையிலேயே இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்நூலாக்கத்திற்குச் செய்யுளியல் தொடர்பான பல்வேறு நூல்கள் பயன்படுத்தப்பட்டதால் அவ்வந் நூல்களில் உதாரண விளக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட செய்யுள்கள் பல இந்நூலிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர்கள் நன்றிக்குரியவர்கள்.

இறுதியாக, இந்த நூலுக்குத் தக்கதொரு அணிந்துரையினைத் தந்து சிறப்பித்தவர் எனது ஆசானும், தமிழ்த்துறையின் தலைவருமாகிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, நூலின் அட்டைப்படத்தினை அழகுபடுத்து வதில் ஆர்வத்தோடு உழைத்தவர் யாழ்ப்பாணப் பல்லைக் கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.பா.அகிலன்; கணினி வடிவமைப்பில் கரிசனையோடு சிறந்தமுறையில் வடிவமைத்தவர்கள் கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினர்; இந்நூல் வெளிவருவதில் அதிக அக்கறையுடன் உழைத்தவர் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க.அருந்தாகரன்; இவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

# பொருளடக்கம்


**அணிந்துரை** iii

**முன்னுரை** vi

1) **செய்யுளும் யாப்பும்** – அறிமுகம் **01**

2) **செய்யுள் உறுப்புக்கள்** **04**

எழுத்து

அசை

சீர்

தளை

அடி

தொடை

3) **பாவகைகள்** **34**

**வெண்பா**

குறள் வெண்பா

நேரிசை வெண்பா

இன்னிசை வெண்பா

சிந்தியல் வெண்பா

பஃறொடை வெண்பா

4) **ஆசிரியப்பா** **52**

நேரிசை ஆசிரியப்பா

இணைக்குறள் ஆசிரியப்பா

நிலைமண்டில ஆசிரியப்பா

அடிமறி மண்டில ஆசிரியப்பா

5) **கலிப்பா** **55**

வண்ணக ஒத்தாழிசை

அம்போதரங்க ஒத்தாழிசை

நேரிசை ஒத்தாழிசை

வெண்கலிப்பா
கலிவெண்பா
கொச்சகக் கலிப்பா

**6) வஞ்சிப்பா** **80**

**7) பாவினம்** **83**

வெண்பாவினம்:
குறட்டாழிசை
வெண்டாழிசை
வெள்ளைச்செந்துறை
வெண்டுறை
வெளிவிருத்தம்

**8) ஆசிரியப்பாவினம்** **87**

ஆசிரியத்தாழிசை
ஆசிரியத்துறை
ஆசிரிய விருத்தம்

**9) கலிப்பாவினம்** **89**

கலித்தாழிசை
கலித்துறை
கலிவிருத்தம்
கட்டளைக்கலிப்பா
கட்டளைக்கலித்துறை

**10) வஞ்சியினம்** **96**

வஞ்சித்தாழிசை
வஞ்சித்துறை
வஞ்சி விருத்தம்

**11) புதிய செய்யுட்கள்** **98**

சிந்து
கும்மி

# செய்யுளும் யாப்பும் – அறிமுகம்

மனிதர்கள் தமது கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கு மொழியைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மொழி ஒரு கருத்துத் தொடர்புச் சாதனமாகவே உருவாகி வளர்ந்து வந்துள்ளதென்பது வெளிப்படை. மௌனம்கூட ஒருவகை மொழியாகவே தொழிற்படுகின்ற சந்தர்ப்பங்களும் எமது வாழ்வில் நிறையவே காணப்படுகின்றன. 'மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி' என்ற மரபார்ந்த வார்த்தையினூடாகவும், மௌனத்தின் மொழி வெளிப்பாட்டுத் தன்மை புலனாகின்றது. சாதாரண வாழ்க்கையில் மௌனத்தினாலும் சைகைகளினாலும்கூட, கருத்தை வெளிப்படுத்தி விடலாம். ஆனால், இலக்கியக் கலையிற் கலைஞன், அதாவது, இலக்கியப் படைப்பாளி தனது கருத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூற மொழியையே பிரதான தொடர்புச் சாதனமாகப் பயன்படுத்து கின்றான். இந்த மொழியை அவன் எவ்வாறெல்லாம் உபயோகிக்கின்றானோ, அதற்கேற்றவாறு அவனது படைப்புக் கவிதையாகவோ, சிறுகதையாகவோ, நாவலாகவோ உருவாகி விடுகின்றது.

தமிழ், உலகிலுள்ள பழமைவாய்ந்த மொழிகளில் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனாலேயே இது செம்மொழி என்ற அந்தஸ்தையும் பெற்றிருக்கின்றது. தமிழி

லுள்ள மிகவும் பழமைவாய்ந்த இலக்கியங்கள் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய சான்றோர் இலக்கியங்களே. சான்றோர் இலக்கியங்கள் அனைத்தும் பாட்டு வடிவிலேயே அமைந்துள்ளன. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் பாட்டு வடிவிலேயே கூறியிருப்பதால், நாம் பா வடிவத்தின் தன்மைகள் பற்றிய தெளிவுடனேயே அக்கால இலக்கியங்களைப் புரிந்து கொள்ளலாம். இவர்கள் பாட்டினை அமைப்பதற்குரிய விதிமுறைகளையும் கூறியுள்ளனர். தொல்காப்பியம், பா (பாட்டு), உரை, நூற்பா (சூத்திரம்) ஆகிய மூன்று வடிவங்களையும் ஒருங்கே செய்யுள், யாப்பு என்ற பெயர் களாலேயே சுட்டுகின்றது. தொல்காப்பியம் இவ்வாறு கூறினாலும் காலப்போக்கிற் செய்யுள், யாப்பு என்பன பா வடிவத்துக்குரியனவாகவே பொருள் கொள்ளப்பட்டன. யாப்பு என்பது படைப்பொன்றின் வடிவ நிலை தொடர்பான தாகும். இச்சொல் இலக்கியக் கட்டமைப்புத் தொடர்பான தாகப் பயின்று வருகின்றது. இலக்கியப் படைப்பாளி தனது மொழியைத் திட்டமிடப்பட்ட தொரு வரையறைக்குள் அமைக்கும்போது அது தனக்கென ஒரு வடிவத்தை உருவாக்கிக்கொள்கின்றது. இதுவே அகவல், வஞ்சி, வெண்பா, கலிப்பா எனப் பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, யாப்பு என்பது பாட்டின் கட்டமைப்புத் தொடர்பானதாக வருவதாற் பாடலொன்றைக் கட்டமைக்கும் போது யாப்புத் தொடர்பான அறிவும், பயிற்சியும் இன்றியமை யாதனவாகும். பாட்டினை (செய்யுளை) அமைப்பதற்குரிய

இலக்கண விதிமுறையினை யாப்பு என்பர். காலப்போக்கிற் செய்யுளையும் யாப்பு என்ற பெயரால் வழங்கியதையும் காணமுடியும். யாப்பிலக்கணம் என்பது செய்யுள் இலக்கணத்தையே குறித்து நிற்பது இதற்குச் சான்றாகும். தொல்காப்பியர் செய்யுளியல் என்ற பகுதியிற் செய்யுளுக் குரிய இலக்கணத்தைக் கூறுகின்றார். பாடலொன்றின் உருவாக்கம் பல்வேறு உறுப்புக்களின் சேர்க்கையினாலேயே சாத்தியமாகின்றது. எனவே, பாடலின் உருவாக்கத்திற் பயன்படுத்தப்படுகின்ற உறுப்புக்கள் தொடர்பாக அறிந்துகொள்வது அவசியமாகும்.

எமக்குக் கிடைத்துள்ள யாப்பிலக்கணம் கூறும் நூல்களிற் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியமே. தொல்காப்பியத்தின் பின்னர் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், இலக்கண விளக்கம் ஆகியனவும் யாப்பிலக்கணத்தைக் கூறுகின்றன. இவற்றுள், வீரசோழியம் கூறும் யாப்பு விதிகள் வடமொழி மரபினைத் தழுவியதென்பதால், தற்காலத்தில் அந்நூல் கூறும் விதிகளைப் பாட்டெழுதுவோர் பின்பற்றுவதில்லை.

தொல்காப்பியம் தமிழ் மரபுக்குரிய செய்யுள் இலக்கணத்தையே கூறுகின்றது. எனினும், தொல்காப்பியர் கூறும் செய்யுள்களிற் சில இக்காலத்தில் எமக்குக் கிடைக்காததால் அதனை விளங்கிக் கொள்வதிலும் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன.

## செய்யுள் உறுப்புக்கள்:

பாடலொன்றின் உருவாக்கம் பல்வேறு உறுப்புக்களின் சேர்க்கையினாலேயே சாத்தியமாகின்றது. எனவே, பாடலின் உருவாக்கத்திற் பயன்படுத்தப்படுகின்ற உறுப்புக்கள் தொடர்பாக அறிந்துகொள்வது அவசியமாகும். தொல்காப்பியர் செய்யுளியலின் முதலாவது சூத்திரத்தில் முப்பத்து நான்கு உறுப்புக்களைச் செய்யுளுக்குரியதாகக் குறிப்பிட்டுள்ளார். அவை வருமாறு:

மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சவகை, முன்னம், பொருள், துறைவகை, மாட்டு, வண்ணம் ஆகியவற்றோடு எண்வகை வனப்புக்களாகிய அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழை ஆகியவற்றையும் சேர்த்து 34 உறுப்புக்களையும் தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களாகக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் இவ்வாறு கூறிச் செல்ல, பிற்கால யாப்பிலக்கண நூலார் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறினையுமே செய்யுளின் உறுப்பாகக் கூறுவர். தற்காலத்திற் செய்யுள் புனைவதற்கு மேற்படி ஆறு உறுப்புக்கள் தொடர்பான அறிவே போதுமானதாக

இருப்பதால் அவை தொடர்பாகவே இங்கு எடுத்துக் கூறப்படுகின்றது.

**1. எழுத்து**

எழுத்துக்கள் முதல் எழுத்துக்கள், சார்பெழுத்துக் கள் என இருவகைப்படும். உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஏனைய எழுத்துக்களின் தோற்றத்திற்குக் காரணமாக இருப்ப தனால் முதலெழுத்துக்கள் எனப்படுகின்றன. இவை தவிர்ந்த ஏனைய எழுத்துக்கள் சார்பெழுத்துக்கள் ஆகும். பன்னிரு உயிர்களையும் குறில், நெடில் என அவற்றின் ஓசை வேறுபாட்டினைக் கருத்திற் கொண்டு இருவகைப் படுத்தலாம். அவ்வாறே பதினெண் மெய்களையும் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாக வகுக்கலாம். இவற்றைவிட முப்புள்ளி வடிவில் அமைந்த ஆய்த எழுத்தும் தமிழ் நெடுங்கணக்கில் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| உயிர் | 12 | = | 12 |
| மெய் | 18 | = | 18 |
| உயிர்மெய் | 12x18 | = | 216 |
| ஆய்தம் | | | 01 |
| | | | 247 |

உயிர் – 12
- உயிர்க்குறில் 05 அ, இ, உ, எ, ஒ
- உயிர்நெடில் 07 ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

| | | |
|---|---|---|
| உயிர்க்குறில் 05 X மெய் 18 = | 90 | உயிர்மெய்க்குறில் |
| | 05 | உயிர்க்குறில் |
| | 95 | குற்றெழுத்துக்கள் |

| | | |
|---|---|---|
| உயிர் நெடில் 07 X மெய் 18 = | 126 | உயிர்மெய் நெடில் |
| | 07 | உயிர் நெடில் |
| | 133 | நெட்டெழுத்துக்கள் |

| | | |
|---|---|---|
| மெய் 18, ஆய்தம் 01 = 19 | 95 | குற்றெழுத்துக்கள் |
| | 133 | நெட்டெழுத்துக்கள் |
| | 19 | மெய் 18 + ஆய்தம் 01 |
| | 247 | எழுத்துக்கள் |

குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரையினையும், நெட்டெழுத்துக்கள் இரண்டு மாத்திரையினையும் உடையனவாகும். ஆய்தமும், மெய் எழுத்துக்களும் அரை மாத்திரை உடையன. மெய் எழுத்துக்கள் யாப்பியலில் கவனிக்கப்படுவதில்லை.

**அசை**

எழுத்துக்களால் உருவாகிச் சீர்களுக்கு உறுப்பாக வருவது அசை எனப்படும். மெய் எழுத்துக்கள் உயிருடன் அல்லது உயிர் மெய்யுடன் சேர்ந்து நின்றே அசையாக அமையும். இவை தனித்து நின்று அசையாவதில்லை. அசையினை நேரசை, நிரையசை என இருவகைப்படுத்துவர்.

**நேரசை:**

குற்றெழுத்துக்கள் அல்லது நெட்டெழுத்துக்கள் தனித்து நின்று அல்லது மெய்யெழுத்தோடு இணைந்து நின்று நேரசையாக அமைகின்றன. நேரசையினை அறிந்துகொள் வதற்கு யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் ஆ, ழி, வெள், வேல் என்ற வாய்பாட்டினைத் தந்துள்ளார்.

ஆ – நெடில் தனித்து வந்த நேரசை
ழி – குறில் தனித்து வந்த நேரசை
வெள் – குறில் ஒற்றுடன் இணைந்து வந்த நேரசை
வேல் – நெடில் ஒற்றுடன் இணைந்து வந்த நேரசை

யாப்பியலில் மெய் எழுத்துக்கள் கவனிக்கப்படுவதில்லை என்பதால், ஓரெழுத்தாலாகிய அசை, நேரசை அல்லது தனியசை எனப்படுகின்றது.

**நிரையசை:**

இரண்டு குற்றெழுத்துக்கள் இணைந்தும், குற்றெழுத்து நெட்டெழுத்துடன் இணைந்தும், இரண்டு குற்றெழுத்துக்கள் மெய்யுடன் இணைந்தும், குற்றெழுத்து நெடிலுடனும் மெய்யுடனும் இணைந்தும் நிரையசை உருவாகின்றது. இதற்கு யாப்பருங்கலக்காரிகை வெறி; சுறா; நிறம்; விளாம் என்ற வாய்பாட்டினைக் கூறும்.

வெறி – இரண்டு குற்றெழுத்துக்கள் இணைந்த நிரையசை

சுறா – குறிலும் நெடிலும் இணைந்த நிரையசை

நிறம் – இரண்டு குறிலும் ஒற்றுடன் இணைந்த நிரையசை

விளாம்– குறில் நெடிலுடனும் ஒற்றுடனும் இணைந்த நிரையசை

தனிக்குறில் முதலில் நேரசையாக வருவதில்லை. இது தொடர்ந்து வருகின்ற நெடிலுடனோ அல்லது ஒற்றுடனோ சேர்ந்தே அசையாகும். நெடிலுக்குப் பின்னர் வருகின்ற தனிக்குறில் நேரசையாகக் கொள்ளப்படும்.

உ+ம் : மாரி வாழ்க.

| | |
|---|---|
| மா + ரி | வாழ் + க |
| நேர் + நேர் | நேர் + நேர் |

**சீர்**

இருவகை அசைகளும் தனித்தாவது இரண்டு அல்லது மூன்று அசைகள் இணைந்தாவது ஓசை பொருந்திவர நிற்பது சீர் எனப்படும். இது தான் கொண்டுள்ள அசைகளின் தொகை பற்றி ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப் படுமாயினும் செய்யுளுக்கு உரிமை பூண்டு நிற்கும் தன்மை நோக்கி அகவற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், பொதுச் சீர், அசைச்சீர் என ஐவகைப்படும்.

**அகவற்சீர்:**

இது இயற்சீர், ஆசிரியச்சீர் என்ற பெயர்களாலும் வழங்கப்படும். இது இரண்டு அசைகள் இணைந்து வருவதால் உருவாகின்றது. இச்சீர் நான்கு வகைப்படும். இதற்கு யாப்பருங்கலக்காரிகை தேமா, கருவிளம், கூவிளம், புளிமா ஆகிய வாய்பாடுகளைக் கூறும். இவ்வாய்பாடு களின் அடிப்படையில் நோக்கும்போது இச்சீர்களின் அமைப்பினைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்.

தேமா – தே + மா

நேர் + நேர்

இங்கு இரண்டு நேரசைகள் இணைந்து வந்துள்ளன.

கருவிளம் – கரு + விளம்

நிரை + நிரை

இங்கு 'க' என்னும் குறிலை முதலில் நேரசையாகக் கொள்ள முடியாமையால் அது தொடர்ந்து வந்த ரு என்றும் மற்றொரு குறிலுடன் இணைந்து கரு என்ற நிரையசையா கியுள்ளது. அவ்வாறே வி என்னும் குறிலும் தொடர்ந்துவந்த குறிலுடனும் ஒற்றுடனும் இணைந்து நிரையசையாகியுள்ளது. இதனால் இது, நிரை + நிரை என இரண்டு நிரையசைகள் இணைந்து நிற்கும் அகவற் சீராக அமைகின்றது.

கூவிளம் – கூ + விளம்

நேர்+ நிரை

இதில் ஒரு நேரசையும் மற்றொரு நிரையசையும் இணைந்து நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

புளிமா – புளி+ மா

நிரை + நேர்

இதில் ஒரு நிரையசையும் மற்றொரு நேரசையும் இணைந்து நிற்கின்றன.

இயற்சீர்கள் வருகின்ற சில பாக்களினடிகளை அலகிட்டு நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| உ+ம்:தீயும் | மண்ணும் | திங்களும் | மீன்களும் |
| நே நே | நே நே | நே நி | நே நி |
| தேமா | தேமா | கூவிளம் | கூவிளம் |
| உடலும் | அறிவும் | உயிரும் | உளவே |
| நி நே | நி நே | நி நே | நி நே |
| புளிமா | புளிமா | புளிமா | புளிமா |
| தின்னப் | பொருளும் | சேர்ந்திடப் | பெண்டும் |
| நே நே | நி நே | நே நி | நே நே |
| தேமா | புளிமா | கூவிளம் | தேமா |
| கற்க | கசடறக் | கற்பவை | கற்றபின் |
| நே நே | நி நி | நே நி | நே நி |
| தேமா | கருவிளம் | கூவிளம் | கூவிளம் |

| | | | |
|---|---|---|---|
| செந்தமிழ் | கேளாச் | செவியாற் | பயனில |
| நே. நி | நே நே | நி. நே | நி நி |
| கூவிளம் | தேமா | புளிமா | கருவிளம் |

அகவற்சீரால் அமைந்த பாடலொன்றில் அசையும் சீரும் அமைந்துள்ள முறையினை நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| குன்றக் | குறவன் | காதன் | மடமகள் |
| நே. நே | நி. நே | நே நே | நி நி |
| தேமா | புளிமா | தேமா | கருவிளம் |
| வரையர | மகளிர்ப் | புரையுஞ் | சாயலள் |
| நி. நி | நி நே | நி. நே | நே நி |
| கருவிளம் | புளிமா | புளிமா | கூவிளம் |
| ஐய | எரும்பிய | முலையள் | |
| நேநே | நி நி | நி நே | |
| தேமா | கருவிளம் | புளிமா | |
| செய்ய | வாயினண் | மார்பினள் | சுணங்கே |
| நே. நே | நே. நி | நே நி | நி நே |
| தேமா | கூவிளம் | கூவிளம் | புளிமா |

இரண்டு அசைகளைக் கொண்ட இயற்சீர்கள் நான்கையும் அடிப்படையாகக் கொண்டே ஏனைய சீர்கள் அமைகின்றன. வெண்சீர் என்பது நான்கு இயற்சீர்களின் இறுதியிலும் ஒரு நேரசையை இணைப்பதால்

உருவாகின்றது. இது 'காய்' என்ற நேரசையாகக் கொள்ளப்பட்டதாலேயே இது காய்ச்சீர் என்றும் அழைக்கப் பட்டது. இதற்கான வாய்பாடு பின்வருமாறு அமையும்.

தேமாங்காய்
நே நே நே
கருவிளங்காய்
நி நி. நே.
கூவிளங்காய்
நே நி நே
புளிமாங்காய்
நி நே நே

இங்கு தேமா, கருவிளம், கூவிளம், புளிமா ஆகிய இயற்சீர்கள் நான்கின் பின்னும் காய் என்ற நேரசை வந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

காய்ச்சீர்கள் வருகின்ற சில பாக்களினடிகளை அலகிட்டு நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| கொற்றவன்தன் | தேவிக்குக் | கோமகன்தன் | தோழியர்கள் |
| நே நி நே | நே நே நே | நே நி நே | நே நி நே |
| கூவிளங்காய் | தேமாங்காய் | கூவிளங்காய் | கூவிளங்காய் |

| | | | |
|---|---|---|---|
| அகத்தாரே | வாழ்வாரென் | றண்ணாந்து | நோக்கிப் |
| நி நே நே | நே நே நே | நே நே நே | நே நே |
| புளிமாங்காய் | தேமாங்காய் | தேமாங்காய் | தேமா |

அட்டாலும் பால்சுவையிற் குன்றாது அளவளாய்
நேநே நே நே நி நே நே நே நே நி நி
தேமாங்காய் கூவிளங்காய் தேமாங்காய் கருவிளம்

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
நி நே நே நே நேநே நே நி நே நே நே
புளிமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய் தேமா.

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
நே நி. நே நே நே நே நே நே நே நே நி நே
கூவிளங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய்

னூண்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க வான்கவிந்த
நே நி நே நே நே நே நே நே நே நே நி நே
கூவிளங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய்

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
நே நே நே நே நே நே நே நே நே நே நி நே
தேமாங்காய் தேமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய்

சாந்துணையுங் கல்லாத வாறு
நே நி நே நே நே நே நே நே
கூவிளங்காய் தேமாங்காய் தேமா.

மேற்படி குறள் வெண்பாவில் இறுதிச்சீர் தவிர்ந்த அனைத்துச் சீர்களும் மூன்றசையுள்ள காய்ச்சீர்களாகவே அமைந்துள்ளன.

மேலும் ஒரு உதாரணம்:

| | | | |
|---|---|---|---|
| வெள்ளம்போல் | தானை | வியந்து | விரவாரை |
| நே நே நே | நே நே | நி நே | நி நே நே |
| தேமாங்காய் | தேமா | புளிமா | புளிமாங்காய் |
| அள்ளி | உணர்தல் | இயல்பன்று | தெள்ளியார் |
| நே நே | நி நே | நி நே நே | நே நி |
| தேமா | புளிமா | புளிமாங்காய் | கூவிளம் |
| ஆறுமேல் | ஆறியபின் | அன்நித்தம் | கைக்கொள்ளார் |
| நே நி | நே நி நே | நே நே நே | நே நே நே |
| கூவிளம் | கூவிளங்காய் | தேமாங்காய் | தேமாங்காய் |
| நீறுமேற் | பூத்த | நெருப்பு. | |
| நே நி | நே நே | நி நே | |
| கூவிளம் | தேமா | புளிமா | |

மேற்படி வெண்பாவில் காய்ச்சீர்களும் இயற்சீர்களும் கலந்து வந்துள்ளன.

**வஞ்சிச் சீர்:**

தேமா முதலிய இயற்சீர்கள் நான்கின்பின்பும் நிரையசை வருவது வஞ்சிச்சீராகும். நிரையசை கனி என்ற வாய்பாட்டாற் குறிக்கப்படுவதால் இதனைக் கனிச்சீர் என்றும் கூறுவர். இதற்கான வாய்பாடு பின்வருமாறு அமையும்.

தே மாங் கனி
நே நே நி

கரு விளங் கனி
நி நி நி

கூ விளங் கனி
நே நி நி

புளி மாங் கனி
நி நே நி

கனிச்சீர்கள் பெரும்பாலும் வஞ்சிப்பாக்களிலேயே வருகின்றன.

உதாரணமாக:

| | |
|---|---|
| மண்ணீரனல் | வளிவானொடு |
| நே நே நி | நி நே நி |
| தேமாங்கனி | புளிமாங்கனி |
| வெண்ணீர்மதி | வெங்கதிருயி |
| நே நே நி | நே நி நி |
| தேமாங்கனி | கூவிளங்கனி |
| வெண்ணீடுரு | வியைபசுபதி |
| நே நே நி | நி நி நி |
| தேமாங்கனி | கருவிளங்கனி |

**பொதுச்சீர்**

தேமா, கருவிளம், கூவிளம், புளிமா ஆகிய ஈரசைச் சீர்கள் நான்குடனும்

தண்பூ ( நேர் + நேர்)
நறுநிழல் (நிரை + நிரை)
தண்ணிழல் (நேர் + நிரை)
நறும்பூ (நிரை + நேர்)

ஆகிய நான்கு சீர்களையும் சேர்க்கும்போது வருகின்ற நாலசை கொண்ட பதினாறு சீர்களும் பொதுச்சீர் எனப்படும்.

**1. தண்பூ**

தேமாந் தண்பூ
நே நே நே நே

கருவிளந்தண்பூ
நி நி நே நே

கூவிளந்தண்பூ
நே நி நே நே

புளிமாந்தண்பூ
நி நே நே நே

**2. தண்ணிழல்**

தேமாந் தண்ணிழல்
நே நே நே நி

கருவிளந் தண்ணிழல்
நி நி நே நி

கூவிளந் தண்ணிழல்
நே நி நே நி

புளிமாந் தண்ணிழல்
நி நே நே நி

**3. நறுநிழல்**

தேமா நறுநிழல்
நே நே நி நி

கருவிள நறுநிழல்
நி நி நி நி

கூவிள நறுநிழல்
நே நி நி நி

புளிமா நறுநிழல்
நி நே நி நி

**4. நறும்பூ**

தேமா நறும் பூ
நே நே நி நே

கருவிள நறும் பூ
நி நி நி நே

கூவிள நறும் பூ
நே நி நி நே

புளிமா நறும் பூ
நி நே நி நே

பொதுச்சீர்கள் வஞ்சிப் பாக்களிலேயே பெரும்பாலும் வருவதுண்டு.

உதாரணமாக:

அள்ளற் பள்ளத் தகண்சோணாட்டு
நே நே நே நே நி நே நே நே
தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ

வேங்கைவாயில் வியன்குன் றூரன்
நே நே நே நே நி நே நே நே
தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ

**அசைச்சீர்**

ஓரசையே தனித்து நின்று இசை நிறைத்துச் சீராக வருவதுண்டு. வெண்பாவின் ஈற்றிலும், கலிப்பாவின்

அம்போதரங்க ஈற்றிலும் இவ்வாறு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனையே அசைச்சீர் என்பர் யாப்பருங்கலம் இதனையும் பொதுச்சீர் என்றே கூறும்.

உ+ம்:

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்.

அமிழ்தினு மாற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

மேற்படி குறள் வெண்பாக்களின் இறுதிச்சீர்கள் மில், கூழ் என ஓரசை கொண்டே முடிகின்றன.

**தளை**

பாடல்களின் அடிகளிலே வருகின்ற சீர்களை ஒன்றோடொன்று இசைத் தொடர்ச்சியுறத் தொடுத்து நிற்பதே தளை எனப்படும். நின்ற சீரின் இறுதியையும், வரும் சீரின் முதலையும் இசைத் தொடர்ச்சியுறத் தொடுத்து நிற்பது எனினும் ஒக்கும். தளை ஏழு வகைப்படும்.

1. நேரொன்றாசிரியத்தளை – மா + நேர்
2. நிரையொன்றாசிரியத்தளை – விள + நிரை
3. வெண்சீர்வெண்டளை – காய்+ நேர்
4. இயற்சீர் வெண்டளை – மா + நிரை / விள + நேர்

5.ஒன்றிய வஞ்சித்தளை – கனி + நிரை

6. ஒன்றாத வஞ்சித்தளை – கனி + நேர்

7. கலித்தளை – காய் + நிரை

மேற்படி தளைகள் பாடல்களில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| உள்ளார் | கொல்லோ | தோழி | முள்ளிடை |
| நே நே | நே நே | நே நே | நே நி |
| தேமா | தேமா | தேமா | கூவிளம் |
| இலவ | மேறிய | கலவ | மஞ்ஞை |
| நி நே | நே நி | நி நே | நே நே |
| புளிமா | கூவிளம் | புளிமா | தேமா |
| எரிபுகு | மகளி | ரேய்க்கும் | |
| நி நி | நி நே | நே நே | |
| கருவிளம் | புளிமா | தேமா | |
| அரிபடு | கள்ளியங் | காடிறந் | தோரே |
| நி நி | நே நி | நே நி | நே நே |
| கருவிளம் | கூவிளம் | கூவிளம் | தேமா. |

பாடலின் முதலாவது அடியிலே உள்ள முதலாவது சீரான 'உள்ளார்' என்பது நேரசைகள் இரண்டைக் கொண்ட சீராகும். இது தேமா என்னும் வாய்பாட்டிற்கேற்ப அமைந்துள்ளது. இதனையடுத்து வருகின்ற 'கொல்லோ'

என்னும் சீரிலும் இரண்டு நேரசைகளே உள்ளன. முதலாவது சீர் தேமாவாக வந்து இரண்டாவது சீர் நேரசையில் ஆரம்பிப்பதால் இதனை மா முன் நேர் வந்த நெரொன்றாசிரியத்தளையாகக் கொள்ளலாம். இவ்வாறே இரண்டாவது சீர் தேமாவாக இருக்க மூன்றாவது சீர் நேரில் ஆரம்பிப்பதால் அங்கும் மாமுன் நேர் வந்த நேரொன்றாசிரியத் தளையே இடம் பெறுகின்றது. நான்காவது சீரான 'முள்ளிடை' என்பது நேரசையினையும், நிரையசை யினையும் கொண்டமைந்துள்ளது. இது கூவிளம் என்னும் வாய்பாட்டில் அமைந்துள்ளது. எனினும் இங்கும் மாமுன் நேர் வந்த நேரொன்றாசிரியத் தளையே அமைகின்றது.

இவ்வாறே ஏனைய அடிகளையும் நோக்கலாம். இரண்டாவது அடியில் முறையே,

மாமுன் நேர் – நேரொன்றாசிரியத்தளை
விளமுன் நிரை – நிரையொன்றாசிரியத்தளை
மாமுன் நேர் – நேரொன்றாசிரியத்தளை

என்றவாறும்,

மூன்றாவது அடியில் முறையே,

விளமுன் நிரை – நிரையொன்றாசிரியத்தளை
மாமுன் நேர் – நேரொன்றாசிரியத்தளை
மாமுன்நேர் – நேரொன்றாசிரியத்தளை

என்றவாறும் இறுதியடியில் எல்லா இடங்களிலும் விளமுன்

நேர் வந்து இயற்சீர் வெண்டளையுமாகத் தளைகள் அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

இனி வெண்பா ஒன்றில் அமைந்துள்ள தளைகளை நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| களிக்குங் | கயல்போலு | நுங்கணுங் | கண்போல் |
| நி நே | நி நே நே | நே நி | நே நே |
| புளிமா | புளிமாங்காய் | கூவிளம் | தேமா |
| களிக்குங் | கயலுங் | கனிவாய்த் | தளிர்க்கொடியீர் |
| நி நே | நி நே | நி நே | நி நி நே |
| புளிமா | புளிமா | புளிமா | கருவிளங்காய் |
| தாமரை | போன்மலரு | நும்முக | நும்முகம்போல் |
| நே நி | நே நி நே | நே நி | நே நி நே |
| கூவிளம் | கூவிளங்காய் | கூவிளம் | கூவிளங்காய் |
| தாமரையுஞ் | செவ்வி | தரும் | |
| நே நி நே | நே நே | நி | |
| கூவிளங்காய் | தேமா | | |

மேற்படி வெண்பாவில்,

**முதலாம் அடியில் முறையே**

மாமுன் நிரை – இயற்சீர் வெண்டளை
காய் முன் நேர்– வெண்சீர் வெண்டளை
விளமுன் நேர் – இயற்சீர் வெண்டளை

**இரண்டாம் அடியில்,**

மாமுன் நிரை – இயற்சீர் வெண்டளை
மாமுன் நிரை – இயற்சீர் வெண்டளை
மாமுன் நிரை – இயற்சீர் வெண்டளை

**மூன்றாம் அடியில்,**

விளமுன்நேர் – இயற்சீர் வெண்டளை
காய் முன் நேர்– வெண்சீர் வெண்டளை
விளமுன் நேர் – இயற்சீர் வெண்டளை

**நான்காம் அடியில்,**

காய்முன்நேர் – வெண்சீர்வெண்டளை
மாமுன்நிரை – இயற்சீர் வெண்டளை

இனி வஞ்சியடிகளில் வருகின்ற வஞ்சித்தளை யினை நோக்கலாம்.

| | |
|---|---|
| மந்தா நிலம் | வந்தசைப்ப |
| நே நே நி | நே நி நே |
| தேமாங்கனி | கூவிளங்காய் |
| வெண்சாமரை | புடைபெயர்தரச் |
| நே நே நி | நி நி நி |
| தேமாங்கனி | கருவிளங்கனி |
| செந்தாமரை | நாண்மலர்மிசை |
| நே நே நி | நே நி நி |
| தேமாங்கனி | கூவிளங்கனி |

மேற்படி பாடலில் முறையே

கனிமுன்நேர் – ஒன்றாத வஞ்சித்தளை
கனிமுன் நிரை– ஒன்றிய வஞ்சித்தளை
கனி முன் நேர்– ஒன்றாத வஞ்சித்தளை

என்றவாறு வஞ்சித்தளைகள் அமைந்துள்ளன.

இனி கலித்தளைகள் இடம் பெறுகின்ற பாடலொன்றை நோக்கலாம்.

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாளி
நே நே நே நி நே நே நி நி நே நி நே நே
தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் புளிமாங்காய்

முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
நே நே நே நி நே நே நி நி நே நி நே நே
தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் புளிமாங்காய்

எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
நே நே நே நி நே நே நி நி நே நி நே நே
தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் புளிமாங்காய்

மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே
நே நே நே நி நே நே நி நே நே நி நே நே
தேமாங்காய் புளிமாங்காய் புளிமாங்காய் புளிமாங்காய்

மேற்படி பாடலில் சகல இடங்களிலும் காய் முன் நிரை வந்து கலித்தளை அமைந்துள்ளதைக் காணலாம்.

**அடி**

இரண்டு முதலிய சீர்களைக் கொண்டு முடிவது அடியாகும். ஓரடியில் குறைந்தபட்சம் இரண்டு சீர்களாவது வரவேண்டும் என்பதால் இரண்டு சீர்கள் வரும்போது அவற்றினிடையே ஒரு தளையும் அமைந்து விடும். அடிகள் ஐந்து வகைப்படும்.

1. குறளடி – இரண்டு சீர்களால் வருவது

2. சிந்தடி – மூன்று சீர்களால் வருவது

3. அளவடி (நேரடி)– நான்கு சீர்களால் வருவது

4. நெடிலடி – ஐந்து சீர்களால் வருவது

5. கழிநெடிலடி – ஐந்திற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது. இது சீர்களின் எண்ணிக் கையுடன் சேர்த்து அறுசீர்க்கழிநெடிலடி, எழுசீர்க்கழி நெடிலடி என்றவாறு வழங்கும்.

**அடிவரையறை**

பாடல்களின் சிற்றெல்லைகளை யாப்பியலார் பின்வருமாறு கூறுவர்.

வெண்பா – இரண்டடி

அகவல் – மூன்றடி

கலிப்பா – நான்கடி

வஞ்சிப்பா – மூன்றடி

பாடல்களின் பேரெல்லைக்கு இலக்கணகாரர் எந்தவிதமான வரையறைகளையும் குறிப்பிடவில்லை. இது பாடுவோரின் நிலைக்கும் பொருளுக்கும் ஏற்ப விரிந்து செல்லக் கூடியதாகும்.

**தொடை**

அடிகளிலேனும், சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றிவருவது தொடை எனப்படும். தொடைகளினாலேயே

செய்யுள் அழகு பெறுகின்றது. தொடையினை முதல் தொடை, உறழ்ச்சித் தொடை என இருவகையாகப் பிரிப்பர். முதல் தொடை செய்யுளின் அடிகளிலும் உறழ்ச்சித்தொடை அடிகளில் வருகின்ற சீர்களிலும் வந்தமைகின்றன.

முதல் தொடை ஐந்து வகைப்படும். அவையாவன.

1. மோனைத் தொடை
2. எதுகைத்தொடை
3. முரண்தொடை
4. இயைபுத் தொடை
5. அளபெடை

**மோனைத்தொடை**

மோனை என்பது முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வரும் சீர்களில் ஒன்றனுள்ளேனும், பலவற்றினுள்ளேனும் வருகின்ற முதலெழுத்துக்கள் ஒன்றி வருவதாகும். இவ்வாறு ஒன்றி வரும்போது அதே எழுத்தோ அல்லது அதன் கிளை எழுத்துக்களோ ஒன்றி வரலாம். கிளை எழுத்துக்களைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டலாம்.

1. அ, ஆ, ஐ, ஔ
2. இ, ஈ, எ, ஏ, ய
3. உ, ஊ, ஒ, ஓ
4. ஞ, ந
5. ம, வ
6. த, ச

ஞ, ந, ம, வ, த, ச தவிர்ந்த ஏனைய மெய்கள் அதற்கு அதுவே மோனையாக வரும். இவையும் தமக்குத்தாமே வருவதுண்டு. மோனைகள் செய்யுளுக்கு அழகு தருவதைப் பின்வரும் செய்யுளிற் கண்டு கொள்ளலாம்.

"தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையான் வயிறலைத்துக் காரிருள் வாய் – வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்"

இச்செய்யுளில் முதலாம் அடியின் முதலாவது சீரில் வருகின்ற 'தை' என்னும் எழுத்துக்கு ஒத்த மோனையாக இரண்டாம் அடி 'கை' என ஆரம்பிக்கின்றது. இவ்வாறே மூன்றாம் அடி 'வா' என்று வந்ததால் நான்காம் அடி அதற்கு ஒத்த மோனையாக 'கூ' என ஆரம்பிக்கின்றது. இதனைவிட அடிகளின் சீர்களிலும்

தையல் – தரியாது – தஞ்சிறகாம்

கையான் – காரிருள் – வெய்யோனை

வாவுபரித் – வாவென்

கூவினவே – கோழிக் – குலம்

என்றவாறு மோனைத்தொடை அமைந்திருப்பதால் செய்யுள் அழகு பெறுவதை உணர முடிகின்றது.

**எதுகை**

சீர்களில் வருகின்ற இரண்டாம் எழுத்து அதே எழுத்தாக வருவதையே எதுகைத் தொடை என்பர்.

அவ்வாறு வரும்போது முதலாம் எழுத்தின் மாத்திரை ஒத்ததாக அமைவது அவசியமாகும். உதாரணமாக

பந்தம் என்பதற்கு கந்தம் என்பதே பொருத்தமான எதுகைச் சொல்லாகும். காந்தம் என்பது பொருத்தமான தாக அமையாது. ஏனெனில் பந்தம் / கந்தம் / காந்தம் என்பவற்றில் இரண்டாம் எழுத்து அதே எழுத்தாகவே இருப்பினும் காந்தம் என்பதில் வந்த முதலாம் எழுத்து நெட்டெழுத்தாக இருப்பதால், இது பந்தம் என்பதற்குப் பொருத்தமான எதுகையாக அமையாது. காந்தம் என்பதற்கு சாந்தம் என்பதே பொருத்தமாக அமையும்.

"அன்னமே நீயுரைத்த அன்னத்தை என்னாவி
உன்னவே சோரும் உனக்கவளோ – டென்னை
அடைவென்றான் மற்றந்த அன்னத்தை முன்னே
நடைவென்றாள் தன்பால் நயந்து"

மேற்படி பாடலில் முதலாம் அடியில் வருகின்ற முதலாவது சீர் 'அன்னமே' என்பதால் இரண்டாம் அடியின் தொடக்கம் 'உன்னவே' என அமைவது எதுகைத் தொடையாகின்றது. இவ்வாறே இரண்டாம் மூன்றாம் அடிகளின் தொடக்கமும் அடை, நடை என ஒத்த எதுகையுடனே வருவதைக் காணலாம்.

அடிகளில் மட்டுமன்றி அடிகளில் வருகின்ற சீர்களிலும் எதுகைத் தொடைகள் அமைந்துள்ளன.

அன்னமே – அன்னத்தை – என்னாவி

உன்னவே – டென்னை

அன்னத்தை – முன்னே

மேற்படி எதுகைகளால் பாடல் அழகுபெற்றிருப்பதை உணரலாம்.

**இயைபுத்தொடை**

அடிதோறும் இறுதி ஒன்றிவருவது இயைபுத் தொடை எனப்படும்.

உதாரணமாக

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"

என்ற பாடலில் முதலாம் அடியின் இறுதிச் சீரும், இரண்டாம் அடியின் இறுதிச் சீரும் கொஞ்சும், கெஞ்சும் என எதுகை, மோனை முதலியவற்றால் ஒன்றி வரும் சீர்களால் தொடுக்கப்பட்டதைக் காட்டலாம்.

**முரண்தொடை**

மொழியாலும் பொருளாலும் முரண்பட அமைந்து வருவது முரண்தொடையாகும். உதாரணமாக "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பதில் முற்பகல் / பிற்பகல் என்பன ஒன்றாது முரண்பட அமைவது முரண்தொடை யாகும்.

அளபெடைத் தொடை

செய்யுளில் வருகின்ற அடிகளில் அல்லது ஓரடியில் வருகின்ற சீரில் எழுத்துக்கள் அளபெடுத்து நிற்பது அளபெடைத் தொடையாகும்.

உதாரணமாக:

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

இங்கு "தொழாஅள்" என்பதில் அளபெடை வந்திருப்பதைக் காணலாம். இது சீரில் வந்த அளபெடை யாகும்.

"ஆஅவளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரைக்கொண் டிருணனைப் பள்ளியுள்"

என்ற செய்யுளடிகளில் முதல் இரு அடிகளின் ஆரம்பத்திலும் அளபெடை வந்துள்ளது. இது அடியள பெடைத் தொடையாகும்.

உறழ்ச்சித் தொடை

ஓரடியில் உள்ள சீர்களில் மோனை முதலிய தொடைகள் வருவது உறழ்ச்சித் தொடை எனப்படும். இது அளவடியிலேயே கொள்ளப்படும். ஓரடியின் சீர்களில் வருகின்ற உறழ்ச்சித் தொடை பதினொரு வகைப்படும்.

1) இணைமோனை
2) பொழிப்புமோனை
3) ஒரூஉ
4) கூழை

5) மேற்கதுவாய் 6) கீழ்க்கதுவாய்

7) முற்று 8) கடையிணை

9) கடைக்கூழை 10) இணைப்புணர்

11) பின்மோனை

இதனைப் பின்வருமாறு விளக்கலாம்.

சீர் 1 ———— x சீர் 2 ———— x சீர் 3 ———— x சீர் 4 ————

1. இணைமோனை – முதல் இரண்டு சீர்களிலும் மோனை வருவது 1, 2
2. பொழிப்பு (ஒன்றுவிட்டது) – முதலாம் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை வருவது 1, 3
3. ஒரூஉ (இரண்டு விட்டது) – முதலாம் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை வருவது 1, 4
4. கூழை (குட்டை, அளவு குறைந்தது) – நிரம்பாமல் குறைப்பட்டு முதல் மூன்று சீர்களில் மட்டும் மோனை வருவது 1, 2, 3
5. மேற்கதுவாய் (கதுவாய் – பொக்கைவாய்) – முன்பக்கமாக பொக்கை உள்ளவாறு முதலாம், மூன்றாம், நான்காம் சீர்களில் மட்டும் மோனை வருவது 1, 3, 4
6. கீழ்க்கதுவாய் – பின்பக்கமாக பொக்கை வரும்படியாக முதலாம், இரண்டாம், நான்காம் சீர்களில் மட்டும் மோனை வருவது 1, 2, 4
7. முற்று – முழுச்சீர்களிலும் மோனை வருவது 1, 2, 3, 4

(இணை மோனை தொடக்கம் முற்றுமோனை வரையான ஏழு உறழ்ச்சித் தொடைகளும் அடியின் முன் பக்கத்தில்

இருந்து எண்ணப்படுபவை. தொடர் ந்து வருகின்ற தொடைகள் அடியின் பின் புறத்திலிருந்து எண்ணப் படுபவை)

8. கடையிணை – இறுதி இரண்டு சீர்களிலும் மோனை வருவது 4,3

9. கடைக்கூழை – இறுதியில் இருந்து எண்ணப் படும்போது முன்புறத்தில் நிரம்பாமல் கூழையாக வருவது. 4, 3, 2 ஆகியவற்றில் மட்டும் மோனைகள் வருவது.

10. இடைப்புணர் – இடையில் ஒன்றோடொன்று இணைந்துள்ள சீர்களில் மோனை வருவது. அதாவது 3ஆம் 2ஆம் சீர்களில் மோனை வருவது.

11. பின்மோனை – ஒரு சீரின் பின்புறமாக உள்ள சீர்களில் மோனை வருவது. இங்கு நான்காம் சீரும் இரண்டாம் சீருமே பின்புறமாக உள்ளதால் அவற்றில் வருகின்ற மோனைகளே பின் மோனையாகும் 4, 2

பாடலொன்றில் உறழ்ச்சித் தொடைகள் அமைந்து காணப்படுவதை நோக்கலாம்.

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| மன்னர் | விழித்தா | மரைபூத்த | மண்டபத்தே |
| பொன்னின் | மடப்பாவை | போய்ப்புக்காள் | – மின்னிறத்துச் |
| செய்யதாள் | வெள்ளைச் | சிறையன்னஞ் | செங்கமலப் |
| பொய்கைவாய்ப் | போவதே | போன்று. | |

1ஆம் அடியில் – 1ஆம், 3ஆம் 4ஆம் சீர்களில் மோனைத் தொடை வருவதால் இது மேற்கதுவாய் மோனையாகும்.

2ஆம் அடியில் – 1ஆம், 3ஆம் சீர்களில் மோனை வருவதால் இது பொழிப்பு மோனை ஆகும்.

3ஆம் அடியில் – 1ஆம், 3ஆம், 4ஆம் சீர்களில் மோனை வருவதால் இது மேற்கதுவாய் மோனை ஆகும்.

4ஆம் அடியில் – மூன்று சீர்களிலும் மோனை வருகின்ற போதும் இது சிந்தடி என்பதால் முற்றாகவோ கூழையாகவோ கொள்ள முடியாது. உறழ்ச்சித்தொடை அளவடியிலேயே கொள்ளப்படும் என்பதை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளவும்.

## பா வகைகள்

செய்யுளுக்குரிய உறுப்புக்களைக் கொண்டு பொருள் புலப்படுமாறு சொற்களால் உருவாக்கப்படுவதே பா எனப்படும். இது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும்.

### வெண்பா

இறுதியடி மூன்று சீர்களுள்ள சிந்தடியாகவும் ஏனைய அடிகள் நாற்சீருள்ள அளவடிகளாகவும் வர காய்ச்சீரும், இயற்சீரும் வந்து வெண்டளை தழுவி நிற்க செப்பலோசை பெற்று வருவது வெண்பாவின் பொதுவான இலக்கணமாகும். வெண்பாவின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டிற்கேற்றவாறு அமையும். காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுக்குப் பொருத்தமான சீர்கள் வரும்போது அவற்றை ஈரசைச் சீர்களாக வெண்பாவிற் கொள்வதில்லை.

### வெண்பாவின் வகைகள்

வெண்பா, குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என ஐந்து வகைப்படும். பஃறொடை வெண்பாவைத் தவிர்த்து மருட்பாவினை இணைத்து ஐந்தாகக் கூறுவதும் உண்டு.

### குறள் வெண்பா

குறள் வெண்பா இரண்டடிகளைக் கொண்டது. இதில் முதலாம் அடி அளவடியாகவும் இறுதியடி

சிந்தடியாகவும் அமையும். இதனால் குறள் வெண்பாவில் ஏழு சீர்கள் வருகின்றன. இரண்டு அடிகளிலும் வருகின்ற முதலாவது சீர்கள் எதுகை, மோனைத் தொடையால் ஒத்தனவாக அமைவது முக்கியமானதாகும்.

உதாரணமாக:

"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு"

என்னும் குறள் வெண்பாவை இலக்கண விதிக்கேற்ப பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

| | | | |
|---|---|---|---|
| படைகுடி | கூழமைச்சு | நட்பரண் | ஆறும் |
| நி நி | நே நி நே | நே நி | நே நே |
| கருவிளம் | கூவிளங்காய் | கூவிளம் | தேமா |

| | | |
|---|---|---|
| உடையான் | அரசரு | ளேறு |
| நி நே | நி நி | ---- |
| புளிமா | கருவிளம் | காசு |

**முதலாம் அடியில்,**

விளமுன்நேர் – இயற்சீர் வெண்டளை
காய்முன் நேர் – வெண்சீர் வெண்டளை
விளமுன் நேர் –இயற்சீர் வெண்டளை

**இரண்டாம் அடியில்,**

மா முன் நிரை – இயற்சீர் வெண்டளை
இது வெண்பாவாதலால் முதலாம் அடியின் இறுதிச்

சீருக்கும், இரண்டாம் அடியின் முதலாவது சீருக்கும் இடையேயும் வெண்டளை அமையவேண்டும். இங்கு அவற்றிலும் மாமுன் நிரை வந்து இயற்சீர் வெண்டளை அமைந்துள்ளது.

அடுத்து முதலாம் அடியின் முதற்சீரும், இரண்டாம் அடியின் முதற்சீரும் படை – உடை என ஒத்த எதுகை உடையனவாக வருவதையும் காணலாம். குறள் வெண்பாவின் இறுதிச்சீரான 'ளேறு' என்பது காசு என்ற வாய்பாட்டிற்கேற்ப அமைந்துள்ளது. மேற்படி காரணங் களால் இப் பா குறள் வெண்பாவுக்குரிய இலக்கண விதியினை மீறாத வகையில் அமைந்திருப்பது தெரிகின்றது.

விளக்கத்திற்காக மேலும் சில குறள் வெண்பாக்களைக் கூறலாம்.

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்

இது நாள் என்னும் வாய் பாட்டால் முடிகின்றது.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

இது மலர் என்னும் வாய் பாட்டால் முடிகின்றது.

"ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணு டைமை மாந்தர் சிறப்பு"

இது பிறப்பு என்னும் வாய் பாட்டால் முடிகின்றது.

**நேரிசை வெண்பா**

நேரிசை வெண்பா சாதாரணமாக நோக்கும்போது, நான்கு அடிகளைக் கொண்டதாகவும், இறுதியடி சிந்தடியாக இருக்க ஏனைய அடிகள் அளவடிகளாக அமைந்திருப்பது போலக் காணப்படினும் இதன் அமைப்பு சற்றுச் சிக்கலான தாகவே உள்ளது. இதன் அமைப்பு குறள் வெண்பாவின் இன்னொரு கட்ட வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகவே காணப்படுகின்றது. அதன் அமைப்பினை நோக்கும்போது இரண்டு குறள் வெண்பாக்களை முன்பின்னாக இணைத்து முதலாவது குறளின் இறுதியடியை தனிச்சொல்லால் நிரப்பி அளவடியாக்கி செப்பலோசை சிதையாத வகையில் அமைக்கப் படுவதே நேரிசை வெண்பாவாகும் எனத் தெரிகின்றது. இதில் முதல் இரண்டடிகளின் முதலாம் சீரின் எதுகை பெற்ற தனிச்சீரே தனிச்சொல்லாக இடப்பட வேண்டும்.

தனிச்சொல்லை இட்டபோதும் முதலாவது குறளின் இறுதியடி அளவடியாக நிரம்பி வெண்டளை பொருந்தி வராமல் விட்டிசைக்குமாயின் அதற்கும் தனிச் சொல்லுக்கும் இடையே ஒன்று அல்லது இரண்டு அசைகளை வைத்து அடியை நிரப்பி வெண்டளை உருவாக்கப்படும். இவ்வாறு வைக்கப்படும் அசைகள் ஆசு எனப்படும். ஆசினால் சீர் நிரம்பும்.

இரண்டு குறள் வெண்பாக்களுக்கும் நடுவில் தனிச்சொல்லை வைத்த உடனேயே அடி நிரம்பும் வெண்பா

இருகுறள் நேரிசை வெண்பா எனப்படும். இவ்வாறான வெண்பாக்கள் பெரும்பாலும் நிரையசையினாலேயே தொடங்குகின்றன.

அடி நிரம்பாமல் ஆசு வைத்து நிரப்பப்படும் வெண்பா ஆசிடை நேரிசை வெண்பா எனப்படும். நேரிசை வெண்பாக் களில் நான்கு அடிகளும் தனிச்சொல்லும் ஒரே எதுகையுடைய சீர்களால் தொடங்குவது ஒரு விகற்பம் என்றும் முதல் இரு அடிகளும் தனிச்சொல்லும் ஒருவகையாகவும், பின் இரு அடிகள் இன்னொரு வகையாகவும் எதுகை பெற்று வருவது இரு விகற்பம் எனப்படும். இவ்வாறன்றி நான்கு அடிகளும் வெவ்வேறு வகையில் அமையுமாயின் அது நேரிசை வெண்பா ஆகாது. இன்னிசை வெண்பாவாகவே கொள்ளப்படும். உதாரண மாகச் சில வெண்பாக்களை நோக்கலாம்.

இருகுறள் நேரிசை வெண்பா:

"நகைகொள் முகமுடைய நல்லோனாம் காந்தி
பகைவனையும் அன்பிற் பரிந்து – மிகநலஞ்செய்
பாங்கதனைக் காட்டியிந்தப் பாருலக முள்ளளவும்
ஓங்கிநின்றான் நல்லோர் உளத்து"

மேற்படி வெண்பாவை இரண்டு குறள் வெண் பாக்களாகப் பிரிக்கும் போது

அவை

1. நகைகொள் முகமுடைய நல்லோனாம் காந்தி
பகைவனையும் அன்பிற் பரிந்து

2. பாங்கதனைக் காட்டியிந்தப் பாருலக முள்ளளவும்
ஓங்கிநின்றான் நல்லோர் உளத்து.

என்றவாறு அமையும். இதில் முதலாவது குறள் வெண்பாவின் இறுதியடி 'பரிந்து' என முடிகின்றது. 'பரிந்து' என்பது வெண்பாவின் இறுதிச் சீராக வருவதற்குக் கூறப்பட்ட பிறப்பு என்ற வாய்பாட்டினுள் அடங்கும். இதனையடுத்து இக்குறள் வெண்பாவின் முதலாம் இரண்டாம் அடிகளில் உள்ள முதற்சீரின் எதுகையுடன் ஒத்த எதுகையுள்ள 'மிக நலஞ்செய்' என்ற கருவிளங்காய்ச் சீரினைத் தனிச் சொல்லாக இட்டபோது அங்கு மாமுன் நிரை வந்து இயற்சீர் வெண்டளை அமைகின்றது.

| | | |
|---|---|---|
| பரிந்து | – | மிக நலஞ்செய் |
| நி நே | | நி நி நே |
| புளிமா | | கருவிளங்காய் |

இதனால் இவ்விரு அடிகளையும் மற்றொரு குறள் வெண்பாவுடன் இணைத்தபோது அது இருகுறள் நேரிசை வெண்பாவாக அமைகின்றது. இவ்வெண்பாவில் நகை – பகை, பாங் – ஓங் என இரண்டு வகையான எதுகைகள் வருவதால் இது இருவிகற்பமுடைய இரு குறள் நேரிசை வெண்பாவாகும்.

ஆசிடைநேரிசை வெண்பா

"முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

மேற்படி வெண்பாவும் இரண்டு குறள் வெண் பாக்களை இணைத்து அமைக்கப்பட்டதே. இதிலுள்ள முதலாவது குறள் வெண்பாவின் இறுதியடி 'மகனே' என்ற சீரால் முடிந்துள்ளது. ஆனால் 'மகனே' என்பது வெண் பாவின் இறுதிச் சீராக வரமுடியாது. இது வெண்பாவின் இறுதிச்சீருக்குரிய காசு, நாள், மலர், பிறப்பு ஆகிய வாய்பாட்டில் அடங்காததாகவேயுள்ளது. மகனே என்பது 'மக' அல்லது 'மகன்' என வருமாயின் 'மலர்' என்ற வாய்பாட்டினுள் அடக்கலாம். ஆனால் மக / மகன் என்பது 'ஒரு கை முகன்' என்ற தனிச்சொல்லோடு இணையும்போது வெண்டளை அமையாது. இதனால் 'மக' என்ற நிரையசையுடன் 'னே' என்ற நேரசையொன்றை ஆசாக வைத்து மகனே என்ற நிரை + நேர் – புளிமாச்சீராக அமைத்தபோதே மாமுன் நிரையாகி இயற்சீர் வெண்டளை அமைகின்றது. இதனால் வெண்பா ஓராசு இடையிட்ட நேரிசை வெண்பாவாகின்றது. முதல் இரு அடிகளிலும் முரு, மரு என ஒரெதுகையும் அடுத்து வருகின்ற அடிகளில் தம், நம் என மற்றொரு வகை எதுகையும் வருவதால் இது இருவிகற்பம் உடையதாகின்றது.

மேலும் ஒரு வெண்பாவை நோக்கலாம்.

ஆத்த வறிவினரா யாண்டிளைஞ ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப – மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்.

மேற்படி வெண்பாவில் இரண்டாம் அடியில் வந்துள்ள 'யடக்குப' என்னும் சீர் குறள் வெண்பாவின் இறுதிச் சீராக அமையாது. இது 'யடக்கு' என வருமாயின் பிறப்பு என்ற வாய்பாட்டினுள் அமையும். ஆனால் யடக்கு என்பது ஆத்த / காத்தோம்பித் ஆகிய சீர்களின் எதுகைபெற்ற 'மூத்தொறூஉம்" என்ற தனிச்சொல்லோடு இணையும்போது வெண்டளை அமையாது.

| | | | |
|---|---|---|---|
| யடக்கு | + | மூத்தொறூஉம் | |
| நி + நே. | | நே. | நி |
| புளிமா | | கூவிளம் | |

இதில் மாமுன் நேர்வந்து நேரொன்றாசிரியத் தளையே அமையும். இது வெண்பாவின் செப்பலோசையைச் சிதைத்து விடும். எனவே 'யடக் கு' என்பதுடன் 'ப' என்ற நேரசையினை ஆசாக இணைத்து 'யடக்குப' என்றவாறு அச்சீரினை மாற்றும்போது அங்கு வெண்டளை பொருந்தி வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| யடக்குப | + | மூத்தொறூஉம் | |
| நி நி | | நே | நி |
| கருவிளம் | | கூவிளம் | |

விளமுன் நேர் வருவதால் இங்கு இயற்சீர் வெண்டளை உருவாகின்றது. எனவே இதுவும் ஓராசு இடையிட்ட நேரிசை வெண்பாவே.

**ஈராசுஇடையிட்ட நேரிசை வெண்பா**

வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன் – வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ.

மேற்படி வெண்பாவில் இரண்டாம் அடியிலுள்ள மூன்றாவது சீரான 'வாய்நேர்ந்தேன்' என்பது குறள் வெண்பாவின் இறுதிச்சீராக அமையாது. இது 'வாய்' என அமைந்திருக்கும்போது நாள் என்ற வாய்பாட்டிற்குரியதாகி குறள் வெண்பாவின் இறுதிச் சீராகி நிற்கமுடியும். ஆனால் இக்குறள் வெண்பாவை மற்றொரு குறள் வெண்பாவுடன் இணைக்கும்போது 'வஞ்சியான்' என்ற தனிச் சொல்லை இட்டதும் 'வாய்' என்ற ஓரசைச் சீரும் 'வஞ்சியான்' என்ற தனிச்சொல்லால் வந்த நேரசையால் தொடங்கும் சீரும் இணையும்போது வெண்டளை அமையாது.

வாய் – வஞ்சியான்
நே — நே நி
(நாள்) — கூவிளம்

வாய்நேர்ந்தேன் x வஞ்சியான்
நே நே நே — நே நி
தேமாங்காய் — கூவிளம்

இதனால் வாய் என்பதுடன் இரண்டு நேரசைகளைக் கொண்ட 'நேர்ந்தேன்' என்ற சொல்லை இணைத்து வாய்நேர்ந்தேன் என்ற மூவசைச் சீராக்கும்போது இது தேமாங்காயாகி, காய் முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளை அமைகின்றது. இங்கு வாய் என்பதுடன் இணைக்கப்பட்ட நேர்ந்தேன் என்பதில் உள்ள இரண்டு நேரசைகளுமே ஆசாகும். இதனால் இது ஈராசு இடையிட்ட நேரிசை வெண்பா ஆகும்.

**இன்னிசை வெண்பா**

இது பல்வேறு விதமாக அமையும். இயற்சீராலும் காய்ச்சீராலும் அமைந்து வெண்டளை விரவப் பெற்ற நான்கு அடிகளில் முதல் மூன்று அடிகளும் அளவடிகளாகவும், இறுதியடி சிந்தடியாகவும் அமைந்து தனிச் சொல் பெறாமல் ஒரு விகற்பமாகவோ இரு விகற்பமாகவோ வருகின்ற வெண்பா இன்னிசை வெண்பாவாகும்.

உதாரணமாக:

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவார்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்

மேற்படி பாடலில் அமைந்துள்ள அசை, சீர், தளை ஆகியவற்றைப் பரிசீலனை செய்து இப்பாடலின் யாப்பினை உறுதி செய்யலாம்.

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
நே நி நே. நே நி நே நே நே நி. நே
கூவிளம் தேமா புளிமாங்காய் கூவிளங்காய்

வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவார்
நே. நி நே. நி நே. நி நே நி நே
கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்

வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
நே நி நே நே நே நே நே நே நே நி
கூவிளம் தேமாங்காய் தேமாங்காய் கூவிளம்

வைகலை வைத்துணரா தார்
நே. நி. நே நி. நே நே
கூவிளம் கூவிளங்காய் (நாள்)

மேற்படி பாடலில்

1) நான்கு அடிகள் உள்ளன. முதல் மூன்றும் அளவடிகள், இறுதியடி சிந்தடி.

2) இயற்சீர்களும் காய்ச்சீர்களுமே வந்துள்ளன.

3) முதலாம் அடியில் விளமுன்நேர், மாமுன் நிரை, வந்து இயற்சீர் வெண்டளையும் காய்முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளையும் அமைந்துள்ளன. இரண்டாம் அடியில் மூன்று இடத்தும் விளமுன் நேர் வந்து இயற்சீர் வெண்டளை அமைந்துள்ளது. மூன்றாம் அடியில்

விளமுன் நேர் வந்து இயற்சீர் வெண்டளையும் காய்முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளையும் அமைந்துள்ளன.

நான்காம் அடியில் விளமுன் நேர் வந்து இயற்சீர் வெண்டளையும் காய்முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளையும் அமைந்துள்ளன.

4) இறுதியடி சிந்தடியாகவுள்ளதோடு இதன் இறுதிச்சீர் நாள் என்ற வாய்பாட்டிற்குரிய தனியசைச் சீராகவும் உள்ளது.

5) நான்கு அடிகளிலும் 'வைக' என ஒரே விகற்பமே வந்தாலும் இரண்டாம் அடியில் உள்ள இறுதிச்சீர் முதல் இரு அடிகளினதும் எதுகை பெற்ற தனிச்சொல்லாக அமையாததால் இப்பாடல் நேரிசை வெண்பாவாக அமையாது. இது இன்னிசை வெண்பாவாகவே அமையும்.

இருவிகற்பமுள்ள இன்னிசை வெண்பா

"இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றறம்"

மேற்படி பாடலில் இன், பின் என முதல் இரண்டு அடிகளும் ஒரெதுகையாகவும் ஒரு, மரு என இறுதியடிகள் இன்னொரு எதுகையாகவும் வருவதால் இது இருவிகற்பமுள்ள இன்னிசை வெண்பாவாகும். இங்கும் ஏனைய விதிகள் அனைத்தும் இடம் பெற்றபோதும்

தனிச்சொல் முதலிரு அடிகளினதும் எதுகையுடன் அமையாததாலேயே இப்பாடல் நேரிசை வெண்பா ஆகாமல் இன்னிசை வெண்பா ஆகக் கொள்ளப்பட்டது.

2. நான்கு அடிகளிலும் தனிச் சொல் பெற்றும் அல்லது ஒரு சில அடிகளில் மட்டும் தனிச்சொல் பெற்றும் இன்னிசை வெண்பா அமையும்.

உதாரணமாக.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை – மழையும்
தவமிலா ரில்வழி யில்லை – தவமும்
அரசிய லில்வழி யில்லை – யரசனும்
இல்வாழ்வா ரில்வழி – யில்

மேற்படி பாடல் நேரிசை வெண்பாவுக்குரிய சீர், தளை, அடி ஆகிய தன்மைகளைப் பெற்று வந்தபோதும், ஒவ்வொரு அடிகளும் வெவ்வேறு விகற்பத்துடன் நிற்பதாலும், அடிகளின் இறுதியில் அவ்வடியின் முதற் சீரின் எதுகை பெற்ற தனிச் சொல்லைக் கொண்டிருப்பதாலும், இது நேரிசை வெண்பா ஆகாது. இன்னிசை வெண்பாவாகவே கொள்ளப்படுகின்றது. எல்லா அடிகளிலுமன்றி ஒரு சில அடிகளில் மாத்திரம் தனிச்சொல் பெற்று வருகின்ற இன்னிசை வெண்பாக்களும் உள்ளன.

உதாரணமாக.

இன்னாமை வேண்டி னிரவெழுக – விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக – தன்னொடுஞ்
செல்வது வேண்டி னறஞ்செய்க – வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

மேற்படி பாடலில் முதல் மூன்று அடிகளில் மாத்திரம் தனிச்சொல் இடம் பெறுவதைக் காணலாம்.

மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும் – மலிதேரான்
கச்சி படுவ கடல்படா – கச்சி
கடல்படுவ தெல்லாம் படும்.

மேற்படி இன்னிசை வெண்பாவில் இரண்டாம் மூன்றாம் அடிகளில் மாத்திரம் தனிச்சொல் வந்துள்ளது.

**சிந்தியல் வெண்பா**

சிந்தியல் வெண்பா மூன்றடிகளைக் கொண்டதாகும். இது குறள் வெண்பாவின் இறுதியடியைத் தனிச்சொல்லால் நிரப்பி வெண்டளை வருவதற்காக ஆசு வைக்கப்படவேண்டியி ருந்தால் அதனையும் வைத்துப் பின்னர் சிந்தடியொன்றை அமைத்து உருவாக்கப்படுவதாகும். சிந்தியல் வெண்பாவினை யும் நேரிசை, இன்னிசை எனப்பாகுபடுத்துவர்.

**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே – பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்

மேற்படி பாடலின் இரண்டாம் அடியிலுள்ள மூன்றாவது சீரான 'புடைத்தாளே' என்பது குறள் வெண்பாவின் இறுதிச் சீராக அமையாது. இது 'புடைத்' என வரும்போதே மலர் என்ற வாய்பாட்டிற்குரியதாகி குறள்

வெண்பாவின் இறுதிச் சீராக அமையும். ஆனால் இதனைச் சிந்தியல் வெண்பாவாக மாற்றும்போது முதல் இரண்டு அடிகளினதும் எதுகை பெற்ற (நற், சுற்) 'பொற்றேரான்' என்ற தனிச்சொல்லை இட்டபோது அங்கு வெண்டளை உருவாக வில்லை. இதனால் 'புடைத்' என்பதுடன் 'தாளே' என இரண்டு நேரசைகளை ஆசாக வைக்க நேரிடுகின்றது.

புடைத்தாளே – பொற்றேரான்
நி நே நே நே நே நே
புளிமாங்காய் தேமாங்காய்

இங்கு காய்முன்நேராகி வெண்சீர்வெண்டளை அமைகின்றது. இதன் பின்னர் மூன்றாவது அடியை வெண்பாவின் இறுதியடிக்குரிய சிந்தடியாக அமைத்தபோது இது ஈராசு இடையிட்ட நேரிசைச் சிந்தியல் வெண்பாவாக அமைகின்றது.

இன்னிசைச் சிந்தியல் வெண்பா

இன்னிசைச் சிந்தியல் வெண்பா நேரிசைச் சிந்தியல் வெண்பா போலவே அமைந்து இரண்டாம் அடியில் தனிச்சொல் பெறாமல் வருவதாகும். உதாரணமாக:

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பிறநாட்டுப் பெண்டி ரடி.

மேற்படி சிந்தியல் வெண்பாவில் இரண்டாம் அடியின் மூன்றாவது சீரான 'முடிநாறும்' என்பதில் இரண்டசைகள் ஆசாக வைக்கப்பட்டுள்ளன.

முடிநாறும் – முடி (மலர் என்ற வாய்பாட்டிற்கேற்றது)

| முடி நாறும் | | பா ரி |
|---|---|---|
| நி × நே × நே | × | நே × நே |
| புளிமாங்காய் | | தேமா |

இங்கு ஆசினாலேயே காய்முன்நேராகி வெண்சீர் வெண்டளை அமைகின்றது. எனினும் முதல் இரு அடிகளினதும் எதுகை பெற்றதாகத் தனிச்சொல் வர வில்லை. நறு – பிற என்பதற்கு ஒவ்வாத எதுகையுடைய தாகவே பாரி என்ற சீர்வந்துள்ளது. எனவே, இது இன்னிசைச் சிந்தியல் வெண்பாவே. ஈராசு பெற்ற இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்றும் கூறலாம்.

### பஃறொடை வெண்பா

வெண்பாவுக்குரிய பொதுவான இலக்கணங்களோடு பொருந்திவருகின்ற பல அடிகளைக் கொண்ட வெண்பாவே பஃறொடை வெண்பாவாகும். இங்கு பல அடிகள் எனும்போது நேரிசை, இன்னிசை வெண்பாக்கள் நான்கு அடிகளைக் கொண்டனவாதலால் நான்கிற்கு மேற்பட்ட அடிகளைக் கொண்டதாகப் பஃறொடை வெண்பா அமையும். நான்கிற்கு மேற்பட்ட பல அடிகளைக் கொண்டதாகவே கலிவெண்பாவும் காணப்படுவதால் ஐந்து முதல் பன்னிரண்டு அடிவரை வருகின்ற வெண்பாக்களையே பஃறொடை வெண்பா என்றும் பன்னிரண்டு அடிகளுக்கு மேல் வருவது கலி வெண்பா என்றும் கூறுவர்.

பஃறொடைவெண்பா நேரிசைப் பஃறொடை வெண்பா, இன்னிசைப் பஃறொடை வெண்பா என இரு வகைப்படும். நேரிசைப் பஃறொடை வெண்பா நேரிசை வெண்பா போல, இரண்டடிக்கொருமுறை தனிச்சொல் பெற்று வரும். இன்னிசைப் பஃறொடை வெண்பா எல்லா அடிகளிலும் தனிச்சொல் பெற்றும், ஒரு சில அடிகளில் மாத்திரம் தனிச்சொல் பெற்றும் அல்லது தனிச்சொல் எதுவும் பெறாமலும் ஒரு விகற்பமாகவேனும், பல்வேறு விகற்பமாகவேனும் வரலாம்.

**நேரிசைப் பஃறொடை வெண்பா**

ஆய்ந்தறிந்து கல்லாதான்
கல்வியும் ஆறறிவில்
தோய்ந்தறிந்து சொல்லாதான்
சொற்பெருக்கும் –தீந்தமிழின்
சொல்லிருக்க வன்கடுஞ்சொற்
சொல்வதூஉம் தன்னனையாள்
இல்லிருக்க வேறில்
லிரப்பதூஉம் – நெல்லிருக்கக்
கற்கறித்து மண்டின்று
காய்த்துக் களத்தடித்த
புற்கறித்து வாழ்வதனைப் போன்ம்.

மேற்படி பாடல் மூன்று விகற்பங்களுடன் இரண்டடிக் கொருமுறை தனிச்சொல் பெற்றுவந்த நேரிசைப் பஃறொடை வெண்பா ஆகும்.

**இன்னிசைப் பஃறொடை வெண்பா**

வையக மெல்லாங்
கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின்
றேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை
வளநாடு வான்கரும்பின்
சாறே யந்நாட்டிற்
றலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப்
புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மான
சருக்கரை மாமணியே
யானேற்றான் கஞ்சி யகம்

இது பல விகற்பங்களுடன் தனிச்சொல் எதுவும் பெறாமல் ஏழடிகளால் வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பாவாகும்.

## ஆசிரியப் பா (அகவல் பா)

அகவல் ஓசையும் இயற்சீரும் அளவடியும் பெற்று ஏ, ஓ, என், ஈ, ஆ, ஐ என்பவற்றுள் ஒன்றை இறுதியாகக் கொண்டு முடிவது ஆசிரியப்பா எனப்படும். ஆசிரியப் பாவுக்கே சிறப்புரிமை பூண்ட சீராக இயற்சீர் கருதப்பட்ட போதும் அகவல் ஓசையினைச் சிதைக்காதவாறு கனிச்சீர் தவிர்ந்த ஏனைய சீர்கள் வருவதையும் இலக்கணகாரர் ஏற்றுக்கொள்வர். ஆசிரியப்பாவுக்குரியதாக நேரொன்றா சிரியத்தளை, நிரையொன்றாசிரியத் தளை ஆகியனவே கூறப்பட்டாலும், இதில் வஞ்சித்தளைகள் தவிர்ந்த ஏனைய தளைகள் வருவதுண்டு.

ஆசிரியப்பாவின் ஈறு பற்றி இலக்கணகாரரிடையே மாறுபட்ட கருத்தும் உண்டு. சிலர் ஆசிரியப்பாவின் இறுதி எவ்வாறு முடியினும் தவறில்லை என்பர். ஆசிரியப்பா மூன்றடி முதல் ஆயிரம் அடிவரை வரும். ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

1.நேரிசை ஆசிரியம் 2. இணைக்குறள் ஆசிரியம்
3.நிலைமண்டிலம் 4. அடிமறி மண்டிலம்

நேரிசை ஆசிரியப்பா

பொதுவான விதிகளுடன் எல்லா அடிகளும் அளவடிகளாக வந்து, இறுதிக்கு முதலடி சிந்தடியாக

வருவது நேரிசை ஆசிரியப்பா எனப்படும்.

உ + ம் :–

| | | | |
|---|---|---|---|
| உள்ளார் | கொல்லோ | தோழி | முள்ளிடை |
| நே. நே | நே. நே | நே. நே | நே நி |
| தேமா | தேமா | தேமா | கூவிளம் |
| இலவ | மேறிய | கலவ | மஞ்ஞை |
| நி. நே | நே. நி | நி. நே. | நே . நே |
| புளிமா | கூவிளம் | புளிமா | தேமா |
| எரிபுகு | மகளி | ரேய்க்கும் | |
| நி. நி | நி. நே | நே. நே | |
| கருவிளம் | புளிமா | தேமா | |
| அரிபடு | கள்ளியங் | காடிறந் | தோரே |
| நி. நி | நே. நி | நே. நி | நே. நே |
| கருவிளம் | கூவிளம் | கூவிளம் | தேமா. |

நான்கு அடிகளைக் கொண்ட மேற்படி பாடலில் இறுதிக்கு முதலடி சிந்தடியாகவும் ஏனைய அடிகள் அளவடிகளா கவும் உள்ளன. இறுதியடி ஏகாரத்தால் முடிகின்றது. அடிகளில் வருகின்ற எல்லாச் சீர்களும் இயற்சீர்களாகவே உள்ளன. சீர்களின் இடையில் மாமுன் நேர் வந்து நேரொன்றாசிரியத் தளையும், விளமுன் நிரைவந்து நிரையொன்றாசிரியத் தளையும், விளமுன்நேர்

வந்து இயற்சீர் வெண்டளையும் அமைந்துள்ளன. இதனால் இது நேரிசை ஆசிரியப்பாவாகும்.

**இணைக்குறள் ஆசிரியப்பா**

நேரிசை ஆசிரியப்பாவில் முதலடியும் இறுதியடியும் அளவடியாகவே இருக்க, இடையிடையே குறளடியும் சிந்தடியும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும். இடையில் அளவடி வருவதும் விலக்கல்ல. இணைக்குறள் ஆசிரியப்பாவிற்கு உதாரணமாகப் பின்வரும் பாடலைக் காட்டலாம்.

நீரின் றண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இப்பாடலில் முதலடியும் இறுதியடியும் அளவடிகளாக இருக்க, இடையே குறளடிகளும் சிந்தடிகளும் வந்துள்ளன. இரண்டாம் மூன்றாம் அடிகளை இணைத்து அளவடியாகவும் அமைக்கலாம்.

**நிலைமண்டில ஆசிரியப் பா.**

ஆசிரியப்பாவுக்குரிய பொதுவான விதிகளுடன் எல்லா அடிகளும் அளவடிகளாகவே வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும்.

உ+ம் :—

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

**அடிமறிமண்டில ஆசிரியப்பா**

நிலைமண்டில ஆசிரியப்பாவில் எந்த அடியை எங்கு மாற்றினாலும் பொருள் மாறுபடாதவாறு வருவது அடிமறி மண்டில ஆசிரியப்பா எனப்படும். இங்கு ஒவ்வொரு அடியிலும் பொருள் முற்றுப் பெறுகின்றது.

உ+ம் :— தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

## கலிப்பா

வெண்சீர் மிகப்பெற்று மாச்சீரும் (தேமா, புளிமா), விளங்கனிச்சீரும் பெறாது (கருவிளங்கனி, கூவிளங்கனி), பிறசீர்களும், சிறுபான்மை கலந்து கலித்தளையும், ஏனைய தளைகளையும் தழுவி; தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அராகம், அம்போதரங்கம் என்னும் ஆறு உறுப்புக்களுள் ஏற்பன கொண்டு நாற்சீரடியால் வருவது கலிப்பா என்பது பொதுவான இலக்கணமாகும்.

கலிப்பா நான்கு வகைப்படும்.

1. ஒத்தாழிசைக் கலிப்பா.
2. வெண்கலிப்பா
3. கொச்சகக் கலிப்பா
4. உறழ் கலிப்பா

**ஒத்தாழிசைக் கலிப்பா**

இது மூன்று வகைப்படும்.

1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

**வெண்பா கலிப்பா**

இது ஒருவகை மட்டுமே.

**கொச்சகக் கலிப்பா**

இது ஐந்து வகைப்படும்.

1. தரவு கொச்சகக் கலிப்பா
2. தரவிணைக் கொச்சகக் கலிப்பா
3. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
4. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
5. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

**உறழ் கலிப்பா**

இதுவும் ஒருவகை மட்டுமே.

எனவே கலிப்பா பத்து வகையாகும்.

**கலிப்பாவின் உறுப்புக்கள் – 6**

1. தரவு
2. தாழிசை
3. தனிச்சொல்
4. சுரிதகம்
5. அராகம்
6. அம்போதரங்கம்

**1. தரவு:–**

இதுவே கலிப்பாவின் முதலாவது உறுப்பு. இது தரவு அல்லது எருத்து எனப்படும். இது ஏனைய உறுப்புக்களில் வருவதைத் தொகுத்துத் தரும் பகுதியாகும். இது மூன்று முதல் பன்னிரண்டு அடிகள் வரை வரும்.

**2. தாழிசை:–**

கலிப்பாவின் இரண்டாவது உறுப்பு. தாழிசை என்பதற்குத் தாளம்பட்ட ஓசையுடையது எனப் பொருள் கூறுவர். இதை இடைநிலைப் பாட்டு என்றும் கூறப்படும். இது தரவினைக் காட்டிலும் எண்ணிக்கையிற் குறைந்த அடிகளையுடையதாக இருக்கும். அதாவது இரண்டு முதல் நான்கு அடிகள் வரை வரும்.

**3. தனிச்சொல்**

பாடலின் பொருளோடு தொடர்புள்ளதாக ஓரசையோ அல்லது ஒருசீரோ தனித்து வருவது தனிச்சொல் எனப்படும். இது தாழிசையின் பின்னர் வரவேண்டும் என்பதே விதியாகும்.

4. சுரிதகம்

இது பாட்டினை முடிக்கும் உறுப்பாகும். இது வெண்பா அல்லது அகவற்பாவாக வரும். அடியளவைப் பொறுத்த வரையில் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாயின் தரவின் அளவை ஒத்ததாகவோ தரவைவிடக் குறைந்த தாகவோ அமையும். ஏனைய கலிப்பாக்களில் தரவை விடக் கூடுதலான அடிகளும் வருவதுண்டு.

5. அராகம்

இது சந்தமமைந்த ஒருறுப்பு: அராகம், வண்ணகம், முருகியல் என்பன ஒரு பொருட் சொற்கள்.

6. அம்போதரங்கம்

அம்போதரங்கம் என்பது நீரலை அல்லது கடலலை எனப்பொருள்படும். கடலலை உயர்ந்தும் தாழ்ந்தும் வருவதுபோல, இவ்வுறுப்பும் நாற்சீரடியாகத் தோன்றிப் பின்னர், முச்சீரடியாய், இருசீரடியாய்ச் சுருங்கி வருவதாகும்.

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

இது தரவு முதலிய ஆறு உறுப்புக்களுள் அராகம், அம்போ தரங்கம் தவிர்ந்த ஏனைய நான்கு உறுப்புக்களை யும் கொண்டதாக வரும்.

உ-ம்:

தரவு

பொய்கைப்பூப் புதிதுண்ட வரிவண்டு கழிப்பூத்த
நெய்தற்றா தமர்ந்தாடிப் பாசடைச் சேப்பினுட்

செய்தியற்றி யதுபோல வயற்பூத்த தாமரை
மைதபு கிளர்கொட்டை மாண்பதிப் படர்தரூஉங்
கொய்குழை யகைகாஞ்சித் துறையணி நல்லூர;

தாழிசை

அன்பில னறனில னெனப்படா னெனவேத்தி
நின்புகழ் பலபாடும் பாணனு மேமுற்றான்;

நஞ்சுயிர் செகுத்தலு மறிந்துண்டாங் களியின்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரு மேமுற்றார்;

முன்பகற் றலைக்கூடி நன்பக லவணீத்துப்
பின்பகற் பிறர்தேரு நெஞ்சமு மேமுற்றாய்;

தனிச்சொல்

எனவாங்கு;

வெள்ளைச் சுரிதகம்

கிண்கிணி மணித்தாரோ டொலித்தார்ப்ப வொண்டொடிப்
பேரமர்க் கண்ணார்க்கும் படுவலை யிதுவென
வூரவ ருடனகத் திரிதருந்
தேரே முற்றன்று நின்னினும் பெரிதே.

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

ஒரு தரவும் மூன்று தாழிசைகளும் அம்போதரங்கமும் தனிச்சொல்லும் சுரிதகமும் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

உ+ம்: தரவு (ஆறடி)

| | | | |
|---|---|---|---|
| கெடலரு | மாமுனிவர் | கிளர்ந்துடன் | தொழுதேத்த |
| கடல்கெழு | கனைசுடரிற் | கலந்தொளிரும் | வாலுளைஇ |
| அடலவிர் | உடல்செங்க | ணரிமாவாய் | மலைந்தனை |
| தாரொடு | முடிபிதிரத் | தமனியப் | பொடிவாங்க |
| நீரென | விழிகுருதி | நிலமுழுது | முடனனைப்பக் |
| கூருகிரான் | மார்பிடந்த | கொலைமலி | தடக்கையோய்! |

**தாழிசை (நான்கடி மூன்று அடுக்கி வரும் தாழிசைகள்)**

| | | | |
|---|---|---|---|
| முரசதிர் | வியன்மதுரை | முழுவதூஉந் | தளைபனிப்பப் |
| புரைதொடித் | திரடிண்டோட் | போர்மலைந்த | மறமல்லர் |
| அடியொடு | முடியறுப்புண் | டயர்ந்தவர் | நிலஞ்சேர |
| பொடியெழ | வெங்களத்துப் | புடைத்ததுநின் | புகழாமோ? |

| | | | |
|---|---|---|---|
| கலியொலி | வியனுலகங் | கலந்துடன் | நனிநடுங்க |
| வலியிய | லவிராழி | மாறெதிர்ந்த | மருட்சோர்வு |
| மாணாதா | ருடம்போடு | மறம்பிதிர | வெதிர்கலக்கிச் |
| சேணாரு | மிருவிசும்பிற் | செகுத்ததுநின் | சினமாமோ? |

| | | | |
|---|---|---|---|
| படுமணி | யினநிரைகள் | பரிந்துட | னிரிந்தோடக் |
| கடுமுர | ணெதிர்மலைந்த | காரொலி | யெழிலேறு |
| வீறினொடு | மருப்பொசிய | வீழ்ந்துதிறம் | வேறாக |
| ஏறுமலி | பெருந்தொழுவி | னிறித்ததுநின் | இகலாமோ? |

அம்போதரங்கம் (நாற்சீரடிகள் இரண்டு அடுக்கி வருகின்றன)

இலங்கொலி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையின் மாஅல் நின்னிறம்
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றதுவட்டோய் புரையு நின்னுடை

நான்கு சீர்களுள்ள ஓரடி நான்கு வருவது

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்குங் கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை

மூன்று சீர்களுள்ள அடிகள் நான்கு வருவது

போரவுணர்க் கடந்தோய் நீஇ;
புணர்மருதம் பிளந்தோய் நீஇ;
நீரகல மளந்தோய் நீஇ;
நிழறிகழைம் படையோய் நீஇ;

இரண்டு சீர்களுள்ள அடிகள் நான்கு வருவது

ஊழிநீஇ ; உலகு நீஇ;
உருவு நீஇ ; அருவு நீஇ;
ஆழிநீஇ; அருளு நீஇ;
அறமு நீஇ; மறமு நீஇ;

**தனிச்சொல்**

எனவாங்கு

**சுரிதகம் (ஆறடியில் முடியும் ஆசிரியச் சுரிதகம்)**

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரி
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா**

இது ஒரு தரவு, மூன்று தாழிசைகள், அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய ஆறு உறுப்புக்களையும் ஒன்றன் பின் ஒன்றாகக் கொண்டமையும். அராக உறுப்பு அளவடி முதல் எல்லா அடிகளாலும் நான்கடிமுதல் எட்டடிவரை வரும்.

அம்போதரங்க, உறுப்பானது நாற்சீரடியாகிய ஈரடியால் இரண்டும், ஓரடியால் நான்கும், முச்சீரடியால் எட்டும், இரு சீரடியால் பதினாறுமாக வரும். சிறுபான்மை யாகவே முச்சீரடி நான்கும் இருசீரடி எட்டுமாக வரும்.

**தரவு**

"தொல்லுலகம் படுசுடிகைச் சுடர்மணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தரதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்ச் செங்கைத் துணைவிதுணைக் கண்களிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்"

**தாழிசை:**

முன்மலையுங் கொலைமடங்க லீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின்வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலும் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடநாக மெட்டும்விடங் கானாக மோரெட்டுந்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடனாக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

**அராகம்**

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமிடல் பெறுபக டொடுமட
லெறுழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை

இலவிதழ் மதிநுத லிரதியோ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னனையடல் செயுநுதல் விழியினை

உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
வலைகடல் விடமுன மமுதுசெய் தருளினை

விசையிலெம் மிறைவியும் வெருவர விரசத
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

**நாற்சீரடி அம்போதரங்கம்**

அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை
பொன்னலம் விழைந்தவர் பொருளு மாயினை
இன்னலம் விழைந்தவர்க் கின்பு மாயினை
மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை.

**முச்சீரடி அம்போதரங்கம்**

முத்தொழிலின் வினைமுத னீ,
மூவர்க்கு முழுமுத னீ,
எத்தொழிலு மிறந்தோய் நீ,
இறவாத தொழிலினை நீ,
இருவிசும்பின் மேலோய் நீ,
எழின் மலரின் மிசையோய் நீ,
அரவணையிற் றுயின்றோய் நீ,
ஆலின்கீ ழமர்ந்தோய் நீ.

**இருசீர் ஓரடி அம்போதரங்கம்**

பெரியை நீ,
சிறியை நீ,
பெண்ணு நீ,
ஆணு நீ,
அரியை நீ,
எளியை நீ,

அறமு நீ,
மறமு நீ,
விண்ணு நீ,
மண்ணு நீ,
வித்து நீ,
விளைவு நீ,
பண்ணு நீ,
பயனு நீ,
பகையு நீ,
உறவு நீ,

**தனிச்சொல்**

எனவாங்கு,

**சுரிதகம் (நேரிசை ஆசிரியம்)**

"கற்பனை கழன்ற நின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே."

மேற்படி வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவில் தரவு முதலிய ஆறு உறுப்புக்களும் அமைந்துள்ளன.

**வெண்கலிப்பா**

வெண்கலிப்பா தொடர்பாக இலக்கணகாரரிடையே கருத்து வேறுபாடு உள்ளது. யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் வெண்கலிப்பாவைத் தனியாகவே கூறியுள்ளார். இதற்கு வகைகள் எதையும் கூறவில்லை. வேறுசிலர் வெண்கலிப்பாவின் ஒருவகையாக கலிவெண்பாவைக் கூறியுள்ளனர். இவ்விரு வகைப் பாக்களுக்கும் இவர்கள் கூறும் விதிகளை நோக்கலாம்.

**வெண்கலிப்பா**

வீரசோழியம், தொல்காப்பியம் ஆகியன கூறிய விதிகளை நோக்கும்போது, வெண்கலிப்பாவில் இறுதியடி சிந்தடியாக இருக்க, ஏனைய அடிகள் அளவடிகளாகவும், கலித்தளையுடன் ஆசிரியத்தளை, வெண்டளை ஆகியன விரவியும் வந்து கலிப்பாவுக்குரிய துள்ளல் ஓசை பொருந்தப் பெற்றிருக்க வேண்டும். இதில் வெண்பாவுக்குரிய தன்மைகள் குறைவாகவே இருக்கும்.

உ+ம்:-

"ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப இறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கணார் வலைப்பட்டு வருந்துபவென்
றார்வரை யகன்மார்பன் தனிமையை யறியுங்கொல்
சீர்நிறை கொடியிடை சிறந்து"

இச் செய்யுளிற் கலித்தளையும் ஆசிரியத்தளையுமே வந்துள்ளன.

### கலிவெண்பா

கலிவெண்பாவில் இறுதியடி சிந்தடியாக இருக்க, ஏனைய அடிகள் அளவடிகளாகவும் வெண்டளை மாத்திரமே பெற்றதாகவும் வரும்

உ+ம் :–

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா, வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர் நாள்
அன்னையும் யானு மிருந்தேமா இல்லிரே!
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக் கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

### கொச்சகக் கலிப்பா

பெண்கள் சேலையின் முன்பகுதியினை அடுக்கடுக்காக மடித்து அழகுபட உடுப்பதைக் கொய்யகம்

அல்லது கொச்சகம் என்பர். கலிப்பாவில் தரவு, தாழிசை ஆகியன அடுக்கடுக்காக வருவதால் இது கொச்சகக் கலிப்பா எனப்படுகின்றது. அடுக்கி வருகின்ற தரவு, தாழிசைகளின் அடிப்படையில் இது தரவிணைக் கொச்சகம், சிஃறாழிசைக் கொச்சகம், பஃறாழிசைக் கொச்சகம் என்ற பெயர்களால் வழங்கப்படுகின்றது. தரவு தனியே வரும்போது ஏனையவை போலவே தரவு கொச்சகம் என்று கொச்சகம் என்ற பெயருடன் இணைத்தே வழங்கப்படு கின்றது. இவற்றை விட கலிப்பாவின் இலக்கணத்திலிருந்து மாறி அல்லது மயங்கி வருவது மயங்கிசைக் கொச்சகம் எனப்படும்.

தரவு கொச்சகம்
இது இருவகைப்படும்

1. தனியே தரவுடன் முடிவது

2. தரவு, தனிச்சொல், சுரிதகம் ஆகியன பெற்று வருவது

உ+ம்: தனியே தரவு மடும் வருவது:

"செல்வப்போர்க் கதக்கண்ணன்
செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர்
முடித்தலையை முருக்கிப்போய்

எல்லைநீர் வியன்கொண்மூ
விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை
மருமம்பாய்ந் தொளித்ததே"

இச்செய்யுளில் அளவடிகள் நான்கு கலித்தளை மட்டுமே பெற்று வருகின்றன. மேலும் நான்கடிகளும் ஒரே எதுகையினைப் பெற்றும் வந்துள்ளன.

முதலாம் அடியில் 1ஆம், 3ஆம், 4ஆம் சீர்களில் (செல், செயி, சின) மோனைகள் வந்துள்ளன. இது மேற்கதுவாய் மோனை ஆகும்.

இரண்டாம் அடியிலும் 1ஆம், 3ஆம், 4ஆம் சீர்களில் (முல், முடி, முரு) மோனைகள் வருவதால் இதுவும் மேற்கதுவாய் மோனை ஆகும். இவற்றைவிட நான்கடிகளிலும் பொழிப்பு மோனைகள் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1ஆம் அடி | – சொல் | – செயி |
| 2ஆம் அடி | –முல் | – முடி |
| 3ஆம் அடி | – எல் | – இடை |
| 4ஆம் அடி | – மல் | – மரு |

பொழிப்பு மோனை வருவது கொச்சகக் கலிப்பாவிற்குச் சிறப்பாகும்.

**தரவு, தனிச்சொல், சுரிதகம் ஆகியவற்றுடன் வருவது**

**தரவு**

குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்
தேங்குசிறு முயலிரியச் சிறுமுல்லை முறுவலிப்ப

**தனிச்சொல்**

என வாங்கு,

**ஆசிரியச் சுரிதகம்**

"ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே"

**தரவிணைக் கொச்சகம்**

இரண்டு தரவுகள் வந்து தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வரும். தரவுகள் இரண்டு வருவதால் தனிச் சொல்லும் இரண்டாகவே வரும்.

உ+ம்:

**தரவு – I**

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாங்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே:

**தனிச்சொல் – I**

எனவாங்கு

**தரவு – II**

துணைவளைத்தோ ளிவள்மெலியத்
தொன்னலத் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே
விதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார்
துணையாகக் கருதாரே;

**தனிச்சொல் - II**

அதனால்,

**ஆசிரியச் சுரிதகம்**

செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றாங்கொலிஃ தெண்ணிய வாறே"

**சிஃறாழிசைக் கொச்சகம்**

தரவுடன் ஒன்றுக்கு மேற்பட்ட தாழிசைகளும் பெற்று ஏனைய உறுப்புக்களுடன் முடிவது சிஃறாழிசைக் கொச்சகம் ஆகும்.

தரவு

உ+ம்:

பரூஉத்தடக்கை மதயானைப்
பணையெருத்தின் மிசைத்தோன்றிக்

குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்
குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும்
பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான்
கூடலார் கோமானே;

**தனிச்சொல் – I**

ஆங்கொருசாரார்,

**தாழிசை – I**

உச்சியார்க் கிறைவனாய் உலகெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;

**தனிச்சொல் – II**

ஆங்கொருசாரார்

**தாழிசை – II**

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

**தனிச்சொல் – III**

ஆங்கொரு சாரார்

**தாழிசை – III**

மால்கொண்ட பகைதணிப்பான்
மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங்
கொடியவனாப் பாவித்தார்
வேல்கொண்ட திண்மையால்
விம்மிதராய் நின்றனரே;

**தனிச்சொல் – IV**

அஃதான்று,

**ஆசிரியச் சுரிதகம்**

கொடித்தேர்த் தோன்றல் கொற்றைக் கோமான்
நின்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே"

இதில் ஒரு தரவுடன் மூன்று தாழிசைகள் வந்துள்ளன. தாழிசைகளின் இடையிடையே நான்கு தனிச்சொற்களும் வந்துள்ளன. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் தனிச்சொற்கள் இவ்வாறு வருவதில்லை. பாடல்

ஏழடி ஆசிரியச் சுரிதகத்தால் முடிகின்றது. சுரிதகம் தரவினைவிட (நாலடி) அடிகளால் கூடியதாகவே உள்ளது. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் எனில் தரவினைவிடச் சுரிதகம் கூடுதலான அடிகளுடன் வருவது தவறாகும்.

**பஃறாழிசைக் கொச்சகம்:-**

தரவுடன் பலதாழிசைகளைப் பெற்று ஏனைய உறுப்புக்களுடன் கூடி முடிவது. இது சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவில் வருவதை விட அதிகளவு தாழிசைகளைக் கொண்டதாக இருக்கும். இவ்வாறான பாடல்களைக் கலித்தொகையில் காணலாம்.

**மயங்கிசைக் கொச்சகம்**

தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய ஆறு உறுப்புக்களிற் சில உறுப்புக்கள் குறைந்தும் கூடியும் வேறுபாக்கள் விரவியும் மாறுபட வருவது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனப்படும்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவிற்கு யாப்பதிகாரம் பின்வரும் பாடலை உதாரணமாகக் காட்டும்.

**தரவு (நான்கடித்தரவுகள் இரண்டு)**

மணிகிளர் நெடிமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்

நுரைநிவந் தவையென்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இறைநயந் திறைகூரு மேமஞ்சேர் துறைவகேள்;
மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கலையெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சேர் துறைவகேள்;

**தாழிசை (இரண்டடித் தாழிசைகள் ஆறு)**

கொடிபுரையு நுழைநுசுப்பிற்
குழைக்கமர்ந்த திருமுகத்தாள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந்
துறைவலனே யென்றியால்
கண்கவரு மணிப்பைம்பூட்
கயில்கவைய சிறுபுறத் தாள்
தெண்பனிநீ ருகக்கண்டுந்
தெரிந்திலனே யென்றியால்
நீர்பூத்த நிரையிதழ்க்க
ணின்றொசிந்த புருவத்தாள்
பீர்பூத்த நுதல்கண்டும்
பிரியலனே யென்றியால்.
கனைவரலாற் றிருகரைபோல்
கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் நிலைகண்டும்
நீங்கலனே யென்றியால்.

வீழ்சுடரி ஙெய்யேபோய்
விழுமநோய் பொறுக்கலாத்
தாழ்தருமென் னிலைகண்டுந்
தாங்கலனே யென்றியால்
கலங்கவிழ்ந்த நாய்கன்போற்
களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும்
போகிலனே யென்றியால்.

**தனிச்சொல்**

அதனால்,

**இரண்டடி அராகம் நான்கு**

அடும்பயி லிறும்பி னெடும்பனைமிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொரு கடல்

அலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலந்தெறு காலொடு புலம்பின பொழில்.

**தாழிசை (ஆறு இரண்டடித் தாழிசைகள் மீண்டும் வருகின்றன)**

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ

ஒல்லாது கழலுமென் ஒள்வளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் நெஞ்சமு நிறுப்பாயோ.

தாங்காது கழலுமென் தகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் நெஞ்சமு நிறுப்பாயோ.

மறவாத வன்பினேன் மன்னிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்

தனிச்சொல் (இரண்டாவது முறை வந்துள்ளது)
ஏனவாங்கு,

அம்போதரங்கம் (இருசீர் ஓரடி எட்டம் போதரங்கம்)
பகைபோன் றதுதுறை; பரிவா யினகுறி,
நகையிழந் ததுமுகம்; நனிநா ணிற்றுளம்
தகையிழந் தனதோள்; தலைசிறந் ததுதுயர்,
புகைபரந் ததுமெய்; பொறையாயிற் றென்னுயிர்

தனிச்சொல் (மூன்றாவது முறை வந்துள்ளது)
அதனால்,

**ஆசிரியச் சுரிதகம்**

இனையது நினையா லனையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்
பனியொடு கழிக வுண்கண்
என்னோடு கழிகவித் துன்னிய நோயே.

மேற்படி மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவின் அமைப்பு பின்வருமாறு உள்ளது.

தரவு – 2 (நான்கடித்தரவுகள் இரண்டு)
தாழிசை – 6 (இரண்டடித் தாழிசைகள் ஆறு)

**தனிச்சொல்**

அராகம் – 4 ( இரண்டடி அராகம் நான்கு)
தாழிசை – 6 (இரண்டடித்தாழிசை ஆறு)

**தனிச்சொல்**

அம்போதரங்கம் (இருசீர் ஓரடி எட்டு)

**தனிச்சொல்**

ஆசிரியச் சுரிதகம் – 4 அடி

இங்கு கலிப்பாவின் உறுப்புக்கள் கூடியும் குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும் வருவதால் இது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனப்பட்டது.

## வஞ்சிப்பா

பெரும்பாலும் கனிச்சீர்களால் அமைந்து வஞ்சித்தளை தழுவி குறளடி, சிந்தடிகளால் ஆரம்பித்து, தனிச்சொல் பெற்று அகவற் சுரிதகத்தால் முடிவது வஞ்சிப்பா எனப்படும். இதன் சிற்றெல்லை மூன்றடியாகும்.

உ+ம் :- பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின் மகிழ்
வினைக்கம் பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்,
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

இது அகவற் சுரிதகத்தால் முடிந்த குறளடி வஞ்சிப்பாவாகும். இப்பாடலில் வந்துள்ள சீர், தளை முதலியவற்றை நோக்கலாம்.

| | |
|---|---|
| வளவயலிடைக் | கள வயின் மகிழ் |
| நி நி நி | நி நி நி |
| கருவிளங்கனி | கருவிளங்கனி |

வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
நி நே நி நி நி நி
புளிமாங்கனி கருவிளங்கனி

மனைச் சிலம்பிய மண முர சொலி
நி நி நி நி நி நி
கருவிளங்கனி கருவிளங்கனி

வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நி நே நி நி நே நி
புளிமாங்கனி புளிமாங்கனி

நாளும்,

| | | |
|---|---|---|
| மகிழ | மகிழ்தூங் | கூரன் |
| நி நே | நி நே | நே நே |
| புளிமா | புளிமா | தேமா |

| | | | |
|---|---|---|---|
| புகழ்த | லானாப் | பெருவண் | மையனே. |
| நி நே | நே. நே | நி. நே | நே நி |
| புளிமா | தேமா | புளிமா | கூவிளம் |

இங்கு குறளடிகளிற் கனிச்சீர்களும் கனிமுன் நேர், கனிமுன் நிரை வந்து ஒன்றாத, ஒன்றிய வஞ்சித்தளைகளும் வந்துள்ளன. தனிச்சொல்லை யடுத்து வரும் சுரிதகம் இறுதியடி அளவடியாக இருக்க, இறுதிக்கு முதலடி

சிந்தடியாக வருவதால் அகவற் சுரிதகமாகின்றது. சுரிதகத்தில் இயற்சீர்களே வந்துள்ளன. இதில் மாமுன் நிரை வந்து இயற்சீர் வெண்டளையும், மாமுன் நேர் வந்து நேரொன்றாசிரியத் தளையும் வந்துள்ளன.

இனி, சிந்தடியால் வருகின்ற வஞ்சிப்பாவினைக் காணலாம்.

"கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாலெயிற் றழலுழையன வள்ளுகிரின

பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி

எயினடுவ ணினிதிருந் தெவ்வுயிர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பினோன்


புணையெனத்,

திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே."

சிந்தடியால் தொடங்கி தனிச்சொல் பெற்று அகவற் சுரிதகத்தால் முடியும் இப்பாடலில், சிந்தடியில் கனிச்சீர், காய்ச்சீர் என்பனவும், வஞ்சித்தளை, கலித்தளை ஆகியனவுமே மிகுதியாக வந்துள்ளன.

# பாவினம்

பாவினங்கள் பற்றித் தொல்காப்பியருக்குப் பின்வந்த இலக்கணகாரர்களே தெளிவாகக் கூறியுள்ளனர். காரிகையாசிரியர் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு வகையான பாக்களுக்கும் தாழிசை, துறை, விருத்தம் என மும்மூன்று வகையான பாவினங்கள் உள்ளதாகக் கூறியுள்ளார். எனவே, பாவினங்கள் பன்னிரண்டாகும்.




## குறட்டாழிசை

குறட்டாழிசை மூன்று வகைப்படும்.

1. நான்கிற்கு மேற்பட்ட சீர்களுடைய இரண்டு அடிகளில் இறுதியடி, முதலாவது அடியைவிடக்குறைவான சீர்களைப் பெற்றுவருவது.

உ+ம்: நீல மாகட னீடு வார்திரை

நின்ற நின்றபோற் பொங்கிப் பொன்றுமாற்

காலம் பலகாலுஞ் சென்றும் செல்வா
யாக்கை கழிதலுமே.

மேற்படி பாடலில் முதலாம் அடியில் எட்டுச்சீர்களும், இரண்டாம் அடியில் அதாவது இறுதியடியில் ஆறுசீர்களும் வந்துள்ளன.

2. நான்கு சீர்களைக் கொண்டு இரண்டடியால் முடியும் வெண்செந்துறை, பொருளாலும் ஓசையாலும் குறைவுபடின், அதுவும் குறட்டாழிசையாகவே கொள்ளப்படும்.

உ+ம்: அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே

3. வேறுதளைவிரவி செப்பலோசையில் குறைந்து வரும் குறள் வெண்பாக்களும் குறட்டாழிசையாகவே கொள்ளப்படும்.

உ+ம்: வண்டார்பூங் கோதை
வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி.

இதில்

வரி வளைக்கைத் திருநுதலாள்
நி நி நே நி நி நே
கருவிளங்காய் கருவிளங்காய்

எனக் காய்முன் நிரைவந்து கலித்தளை வருவதைக் காணக்கூடியதாக வுள்ளது. எனவே, இது குறள் வெண்பாவாக முடியாது.

**வெண்டாழிசை**

மூன்று அடிகளில் இறுதியடி மூன்று சீருள்ள சிந்தடியாகவும், ஏனைய அடிகள் அளவடிகளாகவும் வந்து சிந்தியல் வெண்பாவுக்குரிய வெண்பாவின் தன்மைகள் குறைவுபட்டிருப்பின் அது வெண்டாழிசை எனப்படும்.

உ+ம்: நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்

மேற்படி பாடலில் இரண்டு இடங்களில் மாத்திரம் மாமுன் நிரைவந்து இயற்சீர் வெண்டளை அமைய (நின்று × முனிவு; வேண்டு × பவர்) ஏனைய இடங்களில் மாமுன் நேர் வந்து நேரொன்றாசிரியத் தளையே அமைகின்றது. இதனால் இது சிந்தியல் வெண்பாவாக அமையாது வெண்டாழிசை யாகவே கொள்ளப்படும்.

சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரும்போது அதனை வெள்ளைத் தாழிசை என்பர்.

### வெண்டுறை

வெண்டுறை, வெள்ளைச் செந்துறை, வெண்டுறை என இருவகைப்படும். வெள்ளைச் செந்துறையினை வெண் செந்துறை, குறள் வெண்செந்துறை என்றும் கூறுவர்.

### வெள்ளைச் செந்துறை

குறள் வெண்பாவில் இறுதியாகவுள்ள சிந்தடி நாற்சீருள்ள அளவடியாகமாறி இரண்டும் அளவொத்த அடிகளாகவருவது வெள்ளைச் செந்துறை எனப்படும்.

உ+ம் : "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

இது ஆசிரியத்தளை விரவியும், எதுகைத் தொடை பெறாமலும் வந்ததால் வெள்ளைச் செந்துறையாகும்.

### வெண்டுறை:

மூன்றடிமுதல் ஏழடியீறாக நான்கிற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டதாக வெண்டுறை அமையும். இதில் முன்னுள்ள அடி நீண்டதாகவும், ஏனைய அடிகள் அளவிற் குறைந்தும் ஓசை மாறுபட்டும் அமையும்.

உ+ம் :-

தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னா மென்னாம்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிடும் பிலிற்றி யாங்கே.

இது மூன்றடி பெற்று முதலடி அறுசீராகவும், ஏனைய அடிகள் ஐந்து சீராகிக் குறைந்தும் வந்த வெண்டுறை ஆகும்.

**வெளிவிருத்தம்**

வெளிவிருத்தம், மூன்று அல்லது நான்கு அடிகளைக் கொண்டதாக வந்து அடிகளின் இறுதியில் ஒரு சொல்லையே தனிச் சொல்லாகக் கொண்டமையும்.

உ+ம் :

பண்ணா நின்றே பண்ணில மென்பார் – ஒரு சாரார்
உண்ணா நின்றே உண்ணில மென்பார் – ஒருசாரார்
எண்ணா நின்றே எண்ணில மென்பார் – ஒருசாரார்
மண்ணா நின்றே மண்ணில மென்பார் – ஒருசாரார்,

## ஆசிரியப்பாவினம்

**1. ஆசிரியத் தாழிசை**

எவ்வகைச் சீர்களாலும் தம்முள் அளவொத்த மூன்றடிகளையுடைய தாகத் தனித்தேனும், ஒருபொருள்மேல் மூன்றடுக்கியேனும் ஆசிரியத் தாழிசை அமையும்.

உ+ம் :– சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னனந்தன் கண்களே
யுத்தம னைந்தெழுத் துருவங் காண்பன.

இது இயற்சீர்கள் நான்கினைக் கொண்ட மூன்றடிகளால் முடிந்த ஆசிரியத்தாழிசையாகும். இவ்வாறு மூன்றடுக்கி வருவதும் உண்டு.

2. ஆசிரியத்துறை

நான்கடிகளையுடையதாய் ஈற்றயலடிகுறைந்து வருவதும், ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவதும், இடையிடையே சீர்கள் குறைந்து வருவதும், இடையிடை சீர்கள் குறைந்து இடைமடக்காய் வருவதும் என ஆசிரியத்துறை நான்கு வகைப்படும்.

உ+ம்:- வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய்
வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணத்தோன் யாரே
தண்டளிர்ப்பூம் பிண்டித்
தழையேந்தி வந்தநும்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து
பகர்ந்தோ னன்றே.

இது நான்கு அடிகளில், முதலாம் இரண்டாம் அடிகளில் ஆறுசீர்களும், இறுதிக்கு முதலடியில் அதாவது மூன்றாம் அடியில் நான்கு சீர்களும் வந்து, பின்னர் இறுதியடி மடங்கி ஆறு சீராகவும் வந்த ஆசிரியத் துறையாகும்.

இவ்வாறே, ஏனைய ஆசிரியத்துறைகளுக்கும் பாடல்களைக் கண்டு தெளியலாம்.

ஆசிரிய விருத்தம்

ஆசிரிய விருத்தத்தினையே பிற்காலப் புலவர்கள் பெரிதும் கையாள்கின்றனர். ஆசிரிய விருத்தத்தில்

அற்புதமான பல செய்யுள்களைக் கம்ப இராமாயணத்தில் கண்டு களிக்கலாம். இது ஆறும், ஆறுக்கு மேற்பட்டதுமான நான்கு அடிகளைக் கொண்டு முடிவதாகும். கழிநெடிலடிகள் என்பதால் அவை சீர்களின் தொகையுடன் சேர்த்து அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் என்றவாறாக அழைக்கப்படும்.

உ+ம்:- கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
அகிலாவி குஞ்சி கமழ
மணிகுண் டலங்கள் இருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொல் துணிவே.

இது நாலடியும் ஒருவிகற்பமாக வந்த எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தமாகும்.

### கலிப்பாவினம்

கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் ஆகிய மூன்று பாவினங்களைக் கொண்டதாகும்.

**கலித்தாழிசை**

இரண்டுக்கு மேற்பட்ட அடிகளையுடையதாகி, இறுதி அடி சீரால் மிகுந்திருக்க ஏனைய அடிகள் அளவொத்தனவாக வருவது கலித்தாழிசையாகும். இது தனித்தேனும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியேனும் வரும்.

உ+ம் :–

இருகூற் றுருவத் திருத்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
ஒருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே

இதில் நான்கடிகளில் இறுதியடி, ஐந்து சீர்களைக் கொண்டிருக்க, ஏனைய அடிகள் அளவொத்து நான்கு சீர்களுடன் வந்துள்ளன. இறுதியடி மிகுந்திருக்க ஏனைய அடிகள் ஒவ்வாதனவாக வருகின்ற கலித்தாழிசைகளும் உண்டு.

உ+ம் :

பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே

இதில் இறுதியடி ஐந்து சீர்களைக் கொண்டதாக இருக்க, ஏனைய அடிகளில் நான்கு சீர்களும் மூன்று சீர்களுமாக ஒழுங்கின்றி வந்துள்ளன.

ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி ஈற்றடி மிகுந்து வருகின்ற கலித்தாழிசைகளும் உள்ளன.

உ+ம் :–

செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்

!

முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னான
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்

ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்கள் !

இது ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வந்துள்ள கலித்தாழிசை. ஒவ்வொன்றிலும் முதலடி நான்கு சீர்களாகவும், இறுதியடி ஐந்து சீர்களாகவும் வந்துள்ளதைக் காணலாம்.

**கலித்துறை**

ஐந்து சீர்களுள்ள நான்கடிகளைக் கொண்டதாக வருவது கலித்துறையாகும்.

உ+ம் :–

யானுந் தோழியு மாயமு மாடுந் துறை நண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

**கலிவிருத்தம்.**

நாற்சீருள்ள நான்கடிகளுடன் வருவது கலிவிருத்த மாகும்.

உ+ம்:– வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னாய்தலி னொண்சுட ராழியி னான்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய்.

**கட்டளைக்கலிப்பா**

எழுத்தெண்ணிப் பாடப்படுகின்ற கலிப்பா கட்டளைக் கலிப்பாவாகும். இதன் முதலாம் அடியின் அரைவாசிப் பகுதி தேமா, புளிமா ஆகிய மாச்சீரை முதற் சீராகக் கொண்டு நான்கு சீர்களால் முடியும். இவ்வரையடி யில் நேரசையில் அதாவது தேமாவில் ஆரம்பித்தால் பதினொரு எழுத்துக்களும், நிரையசையில் அதாவது புளிமாவில் ஆரம்பித்தால் பன்னிரண்டு எழுத்துக்களும் வரும். (எழுத்துக்களை எண்ணும்போது ஒற்று நீக்கியே எண்ணப்பட வேண்டும் என்பதை மீண்டும் நினைவிற் கொள்க) இவ்வாறான அரையடிகள் இரண்டினைக் கொண்ட நான்கு அடிகளுடன் வருவதே கட்டளைக் கலிப்பாவாகும்.

உ+ம்:– "படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்தற மூப்பினும்
அடுத்த திங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி யெப்பதி யென்பிரேல்

விடுத்து விட்டிந் திரதரு வம்புவி
　　　　வெண்கு டைக்கு ளிடுமர சாட்சியும்
கடுத்த தும்புக ழுத்தரைத் தேடுவார்
　　　　காத லித்து வருந்திருக் காசியே"

மேற்படி கட்டளைக் கலிப்பாவில் முதலாம் அரையடி நிரையசையில் அதாவது புளிமாச்சீரில் தொடங்கி ஒற்றுநீக்கிப் பன்னிரண்டு எழுத்துக்களைக் கொண்ட நான்கு சீர்களால் வருகின்றது. மீதி அரையடி நேரசையில் அதாவது தேமாச்சீரில் தொடங்கி பதினொரு எழுத்துக் களைக் கொண்ட நான்கு சீர்களால் வருகின்றது. இவ்வாறே ஏனைய மூன்று அடிகளினதும் அரையடிகளும் அமைந் துள்ளன.

### கட்டளைக் கலித்துறை

எழுத்தெண்ணிப் பாடப்படுகின்ற கலித்துறை கட்டளைக் கலித்துறையாகும். இதனைக் கோவைக் கலித்துறை என்றும் கூறுவர். கோவைப் பிரபந்தங்கள் கட்டளைக் கலித்துறையாற் பாடப்படுவதாலேயே இவ்வாறு கூறப்படுவதாகக் கருத இடமுண்டு. கட்டளைக் கலித்துறை ஐந்து சீர்களைக் கொண்ட நான்கடிகளால் வருவதாகும். நேரசையில் தொடங்கும் அடியிற் பதினாறு எழுத்துக்களும், நிரையசையில் தொடங்கும் அடியிற் பதினேழு எழுத்துக் களும் வரும். எழுத்தெண்ணும்போது ஒற்றுக்கள்

எண்ணப்படுவதில்லை. சீர் சிதைகின்றபோது குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகியவற்றை ஒற்றுக்கள் போலவும் ஐகாரக்குறுக்கம்; ஔகாரக்குறுக்கம் ஆகியவற்றைக் குறில் போலவும் கணிக்கவேண்டும் என்பது இலக்கண விதியாகும். மேலும், கட்டளைக் கலித்துறையில் வெண்டளை பிசகாது வரவேண்டும். செய்யுளின் இறுதிச் சீரின் இறுதியசை ஏகாரவீற்றால் வரவேண்டும் என்பதும் விதியாகும். அத்துடன் ஒவ்வோரடியிலும் இறுதிச்சீர் கூவிளங்காயாக அல்லது கருவிளங்காயாக வரவேண்டும் என்பதும் இலக்கண விதியாகும்.

உ+ம் :–

| | | | | |
|---|---|---|---|---|
| அள்ளிக் | கொடுக் கின் ற | செம் பொனு | மாடையு | மாதரவாக் |
| நே. நே | நி. நே நே | நே நி | நே நி | நே நி நே |
| தேமா | புளிமாய்காய் | கூவிளம் | கூவிளம் | கூவிளங்காய் |

| | | | | |
|---|---|---|---|---|
| கொள்ளிக்கும் | பட்ட | கடனுக்கு | மென்னைக் | குறித்ததல்லான் |
| நே நே நே | நே.நே | நி. நே நே | நே. நே | நி நி நே |
| தேமாங்காய் | தேமா | புளிமாங்காய் | தேமா | கருவிளங்காய் |

| | | | | |
|---|---|---|---|---|
| துள்ளித் | திரிகின்ற | காலத்தி | லேயென் | துடுக்கடக்கிப் |
| நே நே | நி நே நே | நே நே நே | நே நே | நி நி நே |
| தேமா | புளிமாங்காய் | தேமாங்காய் | தேமா | கருவிளங்காய் |

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிக்கு | வைத்தில | னேதந்தை | யாகிய | பாதகனே. |
| நே நே நே | நே நி | நே நே நே | நே நி | நே நி நே |
| தேமாங்காய் | கூவிளம் | தேமாங்காய் | கூவிளம் | கூவிளங்காய். |

மேற்படி பாடலில், ஐந்துசீர்கள் உள்ள நெடிலடிகள் நான்கு வந்துள்ளன. இயற்சீரும் காய்ச்சீரும் வந்து வெண்டளை மட்டுமே வந்துள்ளன. ஒவ்வொரு அடிகளிலும் வருகின்ற இறுதிச்சீர்கள் கூவிளங்காய், கருவிளங்காய் ஆகிய விளங்காய்ச் சீர்களாகவே உள்ளன. எல்லா அடிகளும் நேரசையால் தொடங்கி ஒவ்வொரு அடியிலும் பதினாறு எழுத்துக்கள் வந்துள்ளன. இறுதியடியின் இறுதிச் சீர் ஏகார ஈற்றுச் சீராக வந்துள்ளது. எனவே, இப்பாடல் இலக்கண விதிப்படி அமைந்த கட்டளைக் கலித்துறையாகும்.

நிரையசையில் தொடங்கும் கட்டளைக் கலித்துறை யினையும் பார்க்கலாம்.

வலம் புரி  போற்கொடை  வாணன்றென்  மாறை  மழைவளர்பூஞ்
நி நி  நே நி  நே நே நே  நே நே  நி நி நே
கருவிளம்  கூவிளம்  தேமாங்காய்  தேமா  கருவிளங்காய்

சிலம்புறை  சூர் வந்து  தீண் டின  போலொளி  தேம்பியிவ் வா
நி நி  நே நே நே  நே நி  நே நி  நே நி நே
கருவிளம்  தேமாங்காய்  கூவிளம்  கூவிளம்  கூவிளங்காய்

றுலம்புனை  தோளுநின்  னுள்ளமும்  வாடி  யுருகி நின்று
நி நி  நே நி  நே நி  நே. நே  நி நி நே
கருவிளம்  கூவிளம்  கூவிளம்  தேமா  கருவிளங்காய்

புலம்புவ  தென்னைகொல்  லோசொல்ல  வேண்டும்  புரவலனே.
நி நி  நே நி  நே நே நே  நே நே  நி நி நே
கருவிளம்  கூவிளம்  தேமாங்காய்  தேமா  கருவிளங்காய்

மேற்படி பாடலில்,

ஐந்துசீர்களுள்ள நெடிலடிகள் நான்கு வந்துள்ளன. இயற்சீரும், காய்ச்சீரும் வந்து வெண்டளை மட்டுமே வந்துள்ளன. ஒவ்வொரு அடிகளினதும் இறுதிச் சீர்கள் கருவிளங்காய், கூவிளங்காய் ஆகிய விளச்சீர்களாகவே உள்ளன. எல்லா அடிகளும் நிரையசையிலேயே தொடங்கி ஒவ்வோரடியிலும் பதினேழு எழுத்துக்கள் வந்துள்ளன. இறுதியடியின் இறுதிச்சீர் ஏகாரத்தால் முடிகின்றது. எனவே, இது இலக்கண விதிப்படி அமைந்த கட்டளைக் கலித்துறை ஆகும்.

## வஞ்சியினம்

**வஞ்சித்தாழிசை**

இரு சீருள்ள குறளடி நான்கு ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவது வஞ்சித்தாழிசை ஆகும்.

உ+ம் :– மடப்பிடியை மதவேழந்
தடக்கையால் வெயின் மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனே காண்

பேடையை யிரும் போத்துத்
தோகையால் வெயின் மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனே காண்

இரும்பிடியை மதவேழம்
பெருங்கையான் வெயின் மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனே காண்

இப்பாடலில் இயற்சீரும், காய்ச்சீரும் வந்து கலித்தளையும் ஆசிரியத் தளையும் பொருந்தியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

**வஞ்சித்துறை**

குறளடி நான்கு வருவது வஞ்சித் துறையாகும்.

உ+ம் :– பேரறி வன்னான்
சார விருந்த
ஹூரினு மில்லென்
றார விகழ்ந்தே.

**வஞ்சி விருத்தம்**

முச்சீரடி நான்கு வருவது வஞ்சி விருத்தமாகும்.

உ+ம் : "அருவி யாடி யருஞ்சுனை
மருவி யாடி மணிக்கதிர்
இருவி யாடி யிளங்கிளி
ஒருவி யோடி யுவப்பரே."

## பா, பாவின வகைகள் சாராத புதிய செய்யுட்கள்

தமிழ்ச் செய்யுள் இலக்கியப் பரப்பில் கி.பி பதினோராம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட வளர்ச்சி நிலைகள் குறித்த விரிவான இலக்கண நூல்கள் எதுவும் வெளிவரவில்லை. புலவர் குழந்தையின் யாப்பதிகாரம் (1959) கும்மி, சிந்து, வண்ணம், பண்ணத்தி ஆகிய நான்கு வகையான புதிய செய்யுள்களைக் குறிப்பிட்டு அவற்றுக் கான இலக்கணத்தையும் கூறுகின்றது. இவற்றுள் வண்ணம் என்பது விருத்தப்பாவின் ஒரு வகை வளர்ச்சி நிலையாகும். பண்ணத்தி என்பது கீர்த்தனை வடிவமாகும். புலவர் குழந்தைக்குப் பின்னர் புதிய செய்யுள்களுக்கு இலக்கணம் கூற முற்பட்டவர்கள் கும்மி, சிந்து, கீர்த்தனை ஆகிய மூன்று வடிவங்களை மட்டுமே கருத்திற் கொண்ட னர்.

மேற்குறித்த இலக்கண முயற்சிகளில் கவனத்தைப் பெறாத சில புதிய செய்யுள்களும் இலக்கிய வழக்கில் உள்ளன உதாரணமாக இசை நாடகங்களில் பயின்று வருகின்ற தரு, திபதை, தோடயம் முதலிய செய்யுள்களைக் குறிப்பிடலாம்.

**சிந்து**

"ஓரெதுகை பெற்ற இரண்டடிகள் அளவொத்து வருதல் சிந்து எனப்படும். இரண்டடிகளன்றி நான்கடிகள் ஒரெதுகை யுடன் வருவதும் உண்டு என்றவாறாக யாப்பதிகாரம் சிந்து என்ற செய்யுளுக்கு இலக்கணம் கூறும். இவ்வாறு வருகின்ற சிந்து ஓரடியின் மோனைத் தொடை எடுப்பின் முன்னும் பின்னும் உள்ள சீர்களின் ஒத்தநிலை, ஒவ்வாமை என்பவற்றின் அடிப்படையில் முறையே சமனிலைச் சிந்து, வியனிலைச் சிந்து என இருவகைப்படும்.

உ+ம்: சமநிலைச் சிந்து

ஆதி பகவனையே – பசுவே
அன்பாய் நினைப்பாயேல்
சோதி பரகதிதான் – பசுவே
சொந்தம தாகாதோ"

(இடைக்காட்டுச் சித்தர்)

முதலாவது எடுப்பு 'ஆதி பகவனையே' எனக் குறளடியால் தொடங்குகின்றது. பின்எடுப்பு 'ஆதி' என்ற முன்எடுப்பின் முதற்சீரின் மோனைக்கு ஒத்ததாக 'அன்பாய்' எனத் தொடங்கிக் குறளடியாகவே முடிகின்றது. இவற்றினிடையே வருகின்ற 'பசுவே' என்பது தனிச் சொல்லாகும். இவ்விரு எடுப்புக்களும் ஓரடியாகவே கொள்ளப்படும்.

இரண்டாம் அடியின் முதல் எடுப்பு முதலடியின் மோனை பெற்றதாக 'சோதி' எனத் தொடங்கிக் குறளடியால் பசுவே என்ற தனிச் சொல்லுடன் முடிகின்றது. இரண்டாம் அடியின் பின் எடுப்பு முன் எடுப்பின் மோனையுடன் 'சொந்தம்' எனத் தொடங்கிக் குறளடியால் முடிகின்றது. எனவே இச்செய்யுளில் வருகின்ற இரண்டடிகளும் ஒரெதுகை பெற்றும், அளவொத்தும் வருவதால் இது சிந்துக்குரிய பொதுவகை இலக்கணத்தினுள் அடங்கு கின்றது. மேலும் ஒவ்வோர் அடிகளிலும் முன் எடுப்பும், பின்எடுப்பும் மோனையால் ஒத்துவருவதால் இது சமனிலைச் சிந்து ஆகும். ஆதி – அன்பாய்

சோதி – சொந்தம்

சமநிலைச் சிந்தினை அடிகளில் வருகின்ற சீர்களின் எண்ணிக்கையடிப்படையில் பலவாறாக வகுக்கலாம்.

1. குறளடி இரண்டு வருவது – இருசீரிரட்டை
2. சிந்தடி இரண்டு வருவது – முச்சீரிரட்டை
3. அளவடி இரண்டு வருவது – நாற்சீரிரட்டை
4. நெடிலடி இரண்டு வருவது – ஐஞ்சீரிரட்டை
5. கழிநெடிலடி இரண்டு வருவது – அறுசீரிரட்டை

மேலும் இது சீர்களின் எண்ணிக்கைக்கேற்ப எழுசீரிரட்டை, எண்சீரிரட்டை என்றவாறு பெயர் பெறும்.

**வியனிலைச் சிந்து**

"ஓமெனப் பெரியோர்கள் – என்றும்
ஓதுவ தாய்வினை மோதுவதாய்
தீமைகள் மாய்ப் பதுவாய் – துயர்
தீர்ப்பது வாய்நலம் வாய்ப்பதுவாய்

– பாரதியார்.

இதில் முதலாம் அடியின் முன் எடுப்பும், பின் எடுப்பும் மோனையால் ஒத்துவருகின்றன. (ஓ, ஓ) இரண்டாம் அடியின் முன் எடுப்பு (தீ) முதலாம் அடியின் முன் எடுப்புடனும் (ஓ) இரண்டாம் அடியின் பின் எடுப்புடனும் மோனையால் ஒத்து வந்துள்ளன. எனினும் முதலாம் அடியில் தனிச் சொல்லின் முன்னான அரையடி குறளடியாக இருக்க பின் எடுப்பு சிந்தடியாக வருவதால் இங்கு சமனிலை மாறுபடுகின்றது. எனவே இது வியனிலைச் சிந்தாகக் கொள்ளப்படும்.

வியனிலைச் சிந்தினையும் அடிகளில் வருகின்ற சீர்களின் எண்ணிக்கைக்கேற்ப இருசீரிரட்டை, முச்சீரிரட்டை எனப்பகுக்கலாம். மேலும் காவடிச் சிந்து, தங்கச் சிந்து, நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, ஆனந்தக்களிப்பு, தெம்பாங்கு என வருகின்ற பாடல்களும் சிந்துப் பாடல்களே என்பது புலவர் குழந்தையின் கருத்தாகும். இது தொடர்பான பாடல்களை யாப்பதிகாரத்திற்கண்டு கொள்க.

## கும்மி

வெண்டளை பிழையாத ஒரெதுகையுடைய எழுசீர்க் கழிநெடிலடி இரண்டு வருவது கும்மியாகும் என்பது யாப்பதிகாரம் கூறும் கும்மிக்கான பொதுவகை இலக்கணம். மேலும் அடியின் முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை வரவேண்டும். இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் இல்லாத வேறு தளைகள் வருதல் கூடாது; இறுதிச்சீர் பெரும்பாலும் விளங்காய்ச் சீராக வருதல் வேண்டும் என்பது கும்மிக்குரிய இலக்கணமாகும்.

மேற்படி இலக்கண விதிக்கேற்ப வருவது இயற்கும்மி எனப்படும்.

உ+ம்:

உதாரணத்திற்காக பாடலொன்றை அலகிட்டு நோக்கலாம்

| | | | |
|---|---|---|---|
| நல்லபண் | டங்களைக் | கண்டறி | யோமொரு |
| நே நி | நே நி. | நே நி | நே நி |
| கூவிளம் | கூவிளம் | கூவிளம் | கூவிளம் |

| | | |
|---|---|---|
| நாளும் | வயிறார | உண்டறியோம் |
| நே நே | நி நே நே | நே நி நே |
| தேமா | புளிமாங்காய் | கூவிளங்காய் |

| | | | |
|---|---|---|---|
| அல்லும் | பகலும் | அலைந்திடுவோம் | பசி |
| நே நே | நி நே | நி நி நே | நே.நே |
| தேமா | புளிமா | கருவிளங்காய் | தேமா |

| | | |
|---|---|---|
| யாற | வழியின்றி | வாடிடுவோம் |
| நே. நே | நி. நே நே | நே நி நே |
| தேமா | புளிமாங்காய் | கூவிளங்காய் |

மேற்படி பாடலில் எல்லா இடங்களிலும் வெண்டளைகளே வந்துள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1ஆம் அடியில் | – விள | x | நேர் | – இயற்சீர்வெண்டளை |
| | விள | x | நேர் | |
| | விள | x | நேர் | |
| | மா | x | நிரை | |
| | காய் | x | நேர் | – வெண்சீர்வெண்டளை |
| 2ஆம் அடியில் | – மா | x | நிரை | – இயற்சீர்வெண்டளை |
| | மா | x | நிரை | |
| | காய் | x | நேர் | – வெண்சீர்வெண்டளை |
| | மா | x | நிரை | – இயற்சீர்வெண்டளை |
| | காய் | x | நேர் | – வெண்சீர்வெண்டளை |

வெண்டளையுடன் நல் – அல் என ஒரெதுகை பெற்ற எழுசீர்க்கழிநெடிலடிகள் இரண்டு வந்துள்ளன. முதலாம் அடியின் முதற்சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனைகள் ஒத்து வந்துள்ளன (ந – நா) இதனால் இப்பாடலை இயற்கும்மி எனலாம்.

## ஒயிற்கும்மி

எழுசீர்க்கழிநெடிலடிகள் இரண்டில் இரண்டாவது அடியின் முதல் நான்கு சீர்களும் முடுகி வருவது ஒயிற்கும்மி

எனப்படும். அவ்வாறு முடுகிவருகின்ற அடி முதலடியின் மோனையுடையதாக வரும். மேலும் முடுகிவரும் அடியின் மோனையுடையதாகவே மீதி அரையடியின் முதற்சீர் அமையும். முடுகிவருகின்ற சீர்களினிடையே வெண்டளை வரவேண்டிய அவசியமில்லை.

உ+ம்:

"தென்பரங் குன்றினில் மேவுங் குருபர
தேசிகன் மேற்கும்மிப் பாட்டுரைக்க
சிகரத்திரு மகரக்குழை
திகழுற்றிடு முமைபெற்றிடு
தில்லை விநாயகன் காப்பாமே"

மேற்படி பாடலில் முதலாம் அடி வெண்டளை பிழையாத எழுசீர்க் கழிநெடிலடியாகவுள்ளது. இரண்டாம் அடியின் முதல் நான்கு சீர்களும் முடுகி வந்துள்ளன. முடுகிய அடியில் முதலடியின் மோனை வந்துள்ளது (திக – சிக) மேலும் முடுகிய அடியின் மோனையுடையதாகவே இரண்டாம் அடியின் இறுதி அரையடியின் முதற்சீர் வந்துள்ளது (திக – தில்) முடுகி வருகின்ற அடிகளில் புளிமாங்கனிச் சீர்களே வந்து அங்கு கனிமுன் நிரையாக ஒன்றிய வஞ்சித்தளையே வருகின்றது. முடுகிய அடிகளில் வெண்டளை வரவேண்டியதில்லை என்பதால் இது தவறாகாது. மேற்படி காரணங்களால் இது ஒயிற்கும்மிக்

குரிய இலக்கண விதிகளைப் பெற்று ஒயிற்கும்மியாக அமைகின்றது.

**ஓரடிக்கும்மி**

கும்மியின் இலக்கண விதிக்கேற்ப அமைந்த எழுசீர்க் கழிநெடிலடி ஒன்றே பொருள் நிறைவாக வருமாயின் அது ஓரடிக்கும்மி எனப்படும்

உ+ம்:

ஆளுடன் ஆளு முகையாம லேநீங்கள்
ஆளுக் கொருமுழந் தள்ளிநில்லும்"

ஓரடியிலேயே பொருள் நிறைந்து வந்த மேற்படி எழுசீர்க் கழி நெடிலடிக் கும்மியை அலகிட்டு நோக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஆளுடன் | ஆளு | முகையாம | லேநீங்கள் |
| நே நி | நே.நே | நி நே நே | நே நே நே |
| கூவிளம் | தேமா | புளிமாங்காய் | தேமாங்காய் |

| | | |
|---|---|---|
| ஆளுக் | கொருமுழந் | தள்ளிநில்லும் |
| நே. நே | நி நி | நே நி நே |
| தேமா | கருவிளம் | கூவிளங்காய் |

இங்கு விளமுன்நேர், மாமுன் நிரை, காய்முன் நேர் ஆகியன வந்து இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மாத்திரமே அமைவதைக் காணக்கூடியதாக வுள்ளது. மேலும் முதலாம் சீரும் ஐந்தாம் சீரும்

மோனையுடன் வந்திருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. எனவே இது ஓரடிக் கும்மியாகும்.

இவைதவிர தரு, கீர்த்தனை, தோடயம், எனப் பலவாறான பாக்கள் இசை நாடகங்களிலும் நாட்டார் பாடல்களிலும் பயின்று வருகின்றன. அவற்றை மாணவர்கள் படித்துப் பயன்பெறலாம். இவை தொடர்பான தெளிவான இலக்கண முயற்சிகள் மேற்கொள்ளப்படாததால் அவை பற்றி இந்நூலில் எடுத்துக் காட்டப்படவில்லை.

## உசாத்துணை நூல்கள் :



அமிர்தசாகரர் (1965) யாப்பருங்கலக்காரிகை, கழக வெளியீடு, சென்னை.

தொல்காப்பியம் பொருளதிகாரம் – பேராசிரியர் உரை, செய்யுளியல் (1975, ) கழகவெளியீடு, சென்னை.

நாகலிங்கம். க (2003) செந்தமிழ் இலக்கண விளக்கம் இரண்டாம் பாகம், முதற்பகுதி, யாழ்ப்பாணம்.

புலவர் குழந்தை (1981 ஐந்தாம்பதிப்பு) யாப்பதிகாரம், பாரிநிலையம், சென்னை.

விசாகப் பெருமாளையர் (1962 மூன்றாம் பதிப்பு) யாப்பிலக்கணம், வடஇலங்கை தமிழ் நூற்பதிப்பகம், சுன்னாகம்.



எயில்

ISBN 955520120-9
9 789555 201209

Harikanan, Jaffna.